விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 23.03.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 113 | பக்கங்கள் : 16



06
நீதி இல்லையேல் போராட்டம்



07
தலைமன்னாரில் போராட்டம்



11
புர்கா தடைக்கு வலுக்கும் எதிர்ப்பு



12
மீண்டும் களத்துக்கு வரும் ட்ரம்ப்

## யாழில் கொரோனாவால் வயோதிப பெண் மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்தார் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவரிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று 15

## வடக்கில் நால்வருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,மார்ச்.23

வடக்கு மாகாணத்தில் மேலும் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் யாழ்ப்பாணத்தில் மூவரும், மன்னாரில் ஒருவரும் கொரோனா நோய்த் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 294 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே நால்வருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. 15

### ஜெனிவா வாக்கெடுப்பின் பலன் எவ்வாறிருந்தாலும்

# உயிர்த்தியாகம் செய்தேனும் படையினரை பாதுகாப்போம்!

### அமைச்சர் ஜி.எல்.பிரிஸ் சூளுரை!!



கொழும்பு, மார்ச். 23

“ஜெனிவாவில் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் பிரதிபலன் என்னவாக அமைந்தாலும் எமது படையினரை நாங்கள் உயிர்த்தியாகம் செய்தேனும் பாதுகாப்போம்.”

இவ்வாறு கூறியிருக்கின்றார் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். 15

## இஸ்லாமிய நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி, பிரதமர் பேச்சு

கொழும்பு, மார்ச் 23.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த பிரேரணை இன்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் முஸ்லிம் நாடுகள் சிலவற்றின் தலைவர்களுடன் தொலைபேசி மூலமாகத் 15

## ஜெனிவா பிரேரணையை எதிர்த்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

### ஆணையாளரின் புகைப்படத்தை எரிக்கவும் முயற்சி

கொழும்பு, மார்ச் 23

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலிட்டினால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை மற்றும் பிரித்தானியாவின் இலங்கை குறித்த யோசனைக்கு எதிர்ப்பு வெளியிட்டு முஸ்லிம்கள் சிலர் இணைந்து கொழும்பில் நேற்று 15

## கொரோனா தொற்றால் நேற்றும் ஐவர் மரணம்!

கொழும்பு, மார்ச் 23

கொரோனா தொற்றால் நேற்று மட்டும் ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால், நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 551 ஆக அதிகரித்துள்ளது. 15

## இலங்கை தொடர்பான பிரேரணை: ஜெனிவாவில் இன்றே வாக்கெடுப்பு!

ஜெனிவா,மார்ச்.23

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்றுத் திங்கள்கிழமை இடம்பெறவிருந்த நிலையில், சில ஆவணங்களில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக இன்று செவ்வாய்க்கிழமை வரை வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் 15

## “சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பிரதான நபராக நான் மாத்திரமே”

### சமூக ஊடக பிரசாரங்கள் குறித்து ஜனாதிபதி அதிருப்தி



கொழும்பு,மார்ச்.23

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத் துகின்ற பிரதான நபராக நான் மாத்திரமே காணப்படுவதைப் போன்று சமூக ஊடகங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வரும் அவரவர் கடமைகளை முறையாக முன்னெடுப் பதன் மூலம் சூழலை இலகுவாகப் பாதுகாத்துக் 15

## ரூ.30,400 கோடியை 3 ஆண்டுகளுக்கு இலங்கைக்கு இடமாற்றுகிறது சீனா!

கொழும்பு, மார்ச் 23

இலங்கைக்கு 10 பில்லியன் யுவான் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 30 ஆயிரத்து 400 கோடி ரூபாவை (150 கோடி அமெரிக்க டொலர்) 3 ஆண்டுகளுக்கு இடமாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த இடமாற்றம், இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் இரு தரப்பு வர்த் தகம் மற்றும் நேரடி முத லீட்டை ஊக்குவிக்கும் என்பதுடன் இரு நாடுகளும் ஒப்புக் கொண்ட பிறநோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் என்று மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யூ. டி. லக் ஷ்மன் சீன மக்கள் குடியரசு வங்கியின் ஆளுநர் யி ஹாங் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இது தொடர்பில் மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இந்த நிதி இடமாற்றத்துக்கு செலவு இருப்பதால், உடனடியாக பெறாமல் தேவைப்படும்போது பயன்படுத்தப்படும் - என்றார். (அ-ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## உயிர்த்தியாகம்...

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன இலங்கையின் நிலைப்பாட்டினை ஜெனிவாவில் தெரியப்படுத்தியுள்ளார். இந்த தீர்மானம் குறித்து, சொல்வதாயின், தீர்மானம் எந்தவொரு நீதி, நியாயத்திற்கான நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதல்ல. இந்த தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ள 40 நாடுகள் உலகின் ஒரு பகுதியாகவே பிரதிநிதித்து வம் பெறுகின்றன. ஆசிய நாடுகளில் எந்த நாடும் அதில் கையெழுத்திட வில்லை. ஆப்பிரிக்க நாடுகளில் ஒருநாடு மட்டுமே கையெழுத்திட்டுள்ளது. இந்த யோசனை என்பது ஒட்டுமொத்த உலக நாடுகளின் நிலைப்பாடல்ல என்பது இதில் புலப்படுகின்றது. இது விமர்சனத்திற்குரியதாகும்.

உலகை எடுத்துக்கொண்டால் இலங்கை மாத்திரமா பிரச்சினைக்குரியது? மிகவும் பாரதூரமான பிரச்சினை இலங்கையிலா இடம்பெறுகிறது? இலங்கையினால் உலகத்திற்கு உள்ள அச்சுறுத்தல் என்ன? அப்படியாயின் ஏன் இலங்கை மீது கவனம் அதிகரிக்கின்றது? இதற்கு காரணம்தான் வெளிநாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளின் தேவைக்காகவாகும்.

'புலம்பெயர் சமூகத்தின் வசமுள்ள அதிகபட்ச பலமும், ஒருங்கிணைப்பு மற்றும் பணபலம் ஆகியவற்றை பயன்படுத்தியே இலங்கைக்கு எதிராக சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எமது நாட்டின் மக்கள், அரசாங்கத்திற்கு எந்த வகையிலும் இது பாதிக்காது. அத்துடன் தற்போதைய அரசாங்கத்திற்கெதிராக உள்ள எதிர்ப்பாகும். இதற்கு முன் இருந்த அரசாங்கத்திற்கு பாதுகாப்பு செய்ததுடன், முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்கள். அனைத்து நாடுகளையும் சமமான முறையில் கவனிக்கப்படவேண்டும் என்கிற கொள்கையை ஐ. நா. மனித உரிமைப் பேரவை மீறுகிறது.

வாக்கெடுப்பில் எந்த பிரதிபலன் வந்தாலும் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்து விளக்கம் அளிக்கின்றேன். வாக்கெடுப்பில் என்ன நடந்தாலும் 70 ஆண்டுகளுக்கும் மேல் ஐ. நாவில் இருக்கும் நாடாக நாங்கள் எமது பொறுப்பினை சரிவர செய்வோம். ஐ. நாவுக்கு பெறுமதி சேர்க்கின்ற பணிகளை எமது நாடு நிறைவேற்றியுள்ளது. சிறந்த நட்புறவை ஐ.நாவுடன் தொடர்ந்தும் பேணுவோம். இருப்பினும் ஐ.நா உறுப்பு நாடுகள் மற்றும் ஜெனிவா ஆணையாளர் அலுவலகம் என்பவற்றுக்கு இடையே உள்ள விடயத்தை தெரிவித்தால், அந்த அலுவலகம் மிகவும் பக்கச்சார்பாகவே இலங்கை விவகாரத்தில் செயற்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தை குறைத்தே மதிப்பிட்டுள்ளதால் எமது கவலையை இதற்கு தெரிவிக்கின்றோம். அந்த அலுவலகம் மற்றும் விடயதானங்களை மீறியே ஆணையாளர் அலுவலகம் செயற்பட்டிருக்கின்றது. நாட்டின் உள்விவகாரத்தில் தலையீடு செய்ய ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலகத்திற்கு முடியாது. இருப்பினும் அதனையும் அலுவலகம் செய்தது.

இலங்கை மக்களே இதுகுறித்து தீர்மானம் எடுக்க வேண்டும். இலங்கை அரசின் செயற்பாடுகளை வெளிநாட்டமைப்புகளுக்கு கண்காணிப்பு செய்ய இடமளிக்க முடியாது. இலங்கையின் அரசியலமைப்பு மீறும் செயலாகவே இது அமையும். அதனை நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம். எதிர்கால நடவடிக்கைகள் அனைத்தும் உள்நாட்டுப் பொறிமுறைக்கமையவே முன்னெடுப்போம். நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு, உடலாகம ஆணைக்குழு என்பன இருந்ததோடு நவாஸ் ஆணைக்குழுவும் இப்போது உள்ளது. அந்த ஆணைக் குழுக்களுக்கு கௌரவம் அளிக்க வேண்டும்.

இதேவேளை அரசாங்கம் மற்றும் நாடு என்கிற வகையில் ஜெனீவா புதிய யோசனையில் உள்ள ஒரு பயங்கரமாக விடயம் உள்ளது. இலங்கைக்கு எதிராக சாட்சிகளை சேகரித்து, ஆய்வு செய்யவும், அதிகாரிகள் நியமனம் மற்றும் நிதி ஒதுக்கீட்டையும் ஆணையாளரின் அலுவலகம் செய்கின்றது. இந்த செயற்பாட்டை ஐ.நா மனித உரிமையாளர் ஆணையாளர் அலுவலகத்தால் செய்ய இடமளிக்கமுடியாது. இதனை கண்டிக்கின்றோம். தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் பிரதிபலன் என்னவாக அமைந்தாலும் எமது படையினரை நாங்கள் உயிர்த்தியாகம் செய்தேனும் பாதுகாப்போம்.

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் படையினரை பாதுகாப்பதற்கான சட்டங்களை அமைத்துள்ளன. அதேபோன்ற சட்டங்களை நாங்களும் அரசியலமைப்பிலும், நாடாளுமன்றத்தின் ஊடாக உருவாக்குவோம்." எனவும் அவர் தெரிவித்தார்.

## வடக்கில்...

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப் படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த 83 வயது பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 32 வயது பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே தொற்றாளராக அடையாளம் காணப் பட்ட ஒருவருடன் நேரடித் தொடர்புடையவர்.

இதேவேளை, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரும் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் நேரடித் தொடர்புடையவர்.

அத்தோடு, மன்னார் நகரைச் சேர்ந்த ஆண் ஒருவர் மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது என மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## யாழில்...

உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக்காலை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த 63 வயது வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் கடந்த வாரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர் மூச்சுத் திணறலையடுத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அவர் உயிரிழந்தார்.

இந்த வயோதிபப் பெண்ணுக்கு மருத்துவ சேவை வழங்கிய அதிதீவிர சிகிச்சை பிரிவு தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, வயோதிபப் பெண்ணின் சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின் தகனம் செய்யப்படவுள்ளது.

## கொரோனா...

இதேவேளை, நேற்று உயிரிழந்தவர்கள் குருநாகல், காலி, கம்பஹா மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்றும் அனைவரும் 50 வயதைக் கடந்தவர்கள் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று உயிரிழந்தவர் இந்த எண்ணிக்கைக்குள் அடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுற்றாடலுக்கு...

கொள்ள முடியும் என்று இவ்வாறான பிரசாரங் களை பரப்புபவர்களிடம் தெரிவிக்க விரும்பு கின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

குப்பை மலைகள் நிறைந்த இடமாக காணப்பட்ட கொழும்பை குறுகிய காலத்தில் அழகிய நகரமாக நாமே மாற்றினோம் என்பதை தற்போது என்னை அதிகமாக விமர்சிக்கும் கொழும்பு மக்கள் நன்று அறிவர் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுபீட்சத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைய நேற்றுத் திங்கள் கிழமை நதிகளை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி தலைமையில் மாணிக்க கங்கைக்கு அருகில் றுஹூணு கதிர்காம புனித தலத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்தவை வருமாறு:

சர்வதேச நீர் தினமான இன்று (நேற்று) நதிகளை பாதுகாப்போம் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்று சுற்றாடல் பாதுகாப்பு பெருமளவானோர் மத்தியில் பிரதான பேசு பொருளாகியுள்ளது. சுற்றாடலில் நீர் முக்கியத்துவமுடைய காரணியாகவுள்ளது. இலங்கையில் காணப்படுகின்ற 103 நதிகள் பெறுமதிவாய்ந்தவையாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் வெள்வேறு நிலைப்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. இதனூடாக போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக ஊடகங்கள் ஊடாக பாரியவில் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நான் செயல்பட்ட போது சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். இதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பிரதான நபராக நான் மாத்திரமே காணப்படுவதைப் போலவே சமூக ஊடகங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நான் மாத்திரம் மரங்களை வெட்டுவதைப் போலவும் ஏனைய அனைவரும் சுற்றாடலைப் பாதுகாப்பவர்களைப் போலவும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

ஒவ்வொருவரும் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவார்களாயின் சுற்றாடலைப் பாதுகாப்பது இலகுவானதாகும் என்று சமூக வலைத்தளங்களில் பிரசாரங்களை முன்னெடுப்பவர்களிடம் தெரிவிக்கின்றேன். மக்களால் இழைக்கப்படும் தவறுகளாலேயே பணத்தை செலவிட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்கும் போது தற்போது எம்மை அதிகளவில் விமர்சிக்கும் கொழும்பு வாழ் மக்களுக்கு கொழும்பில் எவ்வாறு குப்பை மலைகள் குவிந்திருந்தன என்பது நன்றாகத் தெரியும். அவற்றை அப்புறப்படுத்த முடியாது என்று சிலர் கூறினர். எனினும் நாம் குறுகிய காலத்தில் அவற்றை அப்புறப்படுத்தி அழகான சூழலை உருவாக்கினோம்.- என்றார். (அ-எ)

## இலங்கையின்...

பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் தற் போது இடம்பெற்று வரும் நிலையில் பிரித்தானியா, கனடா, ஜேர்மன், வட மசிடோனியா, மொன்டனீக்ரோ, மலாவி ஆகிய நாடுகள் இணைந்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்வைத்துள்ளன. இந்தத் பிரேரணையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல காரணிகள் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்றுத் திங்கள் கிழமை இலங்கை தொடர்பில் விவாதத்தோடு முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம் பெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

வாக்கெடுப்பின் பின்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இலங்கையின் நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், குறித்த பிரேரணையில் பல விடயங்கள் அரசியல் தேவைக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன என இலங்கை எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

இலங்கையின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் குற்றம்சுமத்துதல், அவை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துதல் என்பன சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## ஜெனிவா...

ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பில் உள்ள ஐ.நாவின் கிளை அலுவலகத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை முற்பகலில் இந்த அமைதி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர் ஒருவர், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேலின் புகைப்படத்தை கிழித்தெறிந்தார். அதனை கீழே எறிந்து காலிலும் மிதித்தார்.

மற்றும் ஆணையாளரின் புகைப் படத்தை தீயிட்டு கொளுத்த அவர் முயற்சித்தபோது பொலிஸார் வந்து தடுத்ததால் அங்கு பரபரப்பு நிலை ஏற்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்று வரும் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் போர்க் குற்றச்சாட்டு மற்றும் பொறுப்புகூறல் தொடர்பில் பிரித்தானியாவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மீது இன்று வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

## இஸ்லாமிய...

தொடர்பு கொண்டு பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இஸ்லாமிய நாடுகள் ஒன்றியத்தின் செயலா ளர் நாயகம் டாக்டர் யுசெப் ஏ. அலோத்தி மேனுடன் ஞாயிற்றுக்கிழமை தொடர்பு கொண்ட ஜனாதிபதி, இரு தரப்பு உறவுகள் குறித்தும், இலங்கையில் முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பாகவும் உரையாடியுள்ளார்.

கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம் களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற் கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கியிருப்பதற்கு இஸ்லாமிய நாடுகள் ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் நன்றி தெரிவித்தார்.

இதேவேளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பஹ்ரெயின் மன்னர் சல்மான் பின் ஹமீட்டுடன் தொலைபேசி மூலமாகப் பேசியுள்ளார். இருதரப்பு உறவுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது தாம் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

## நவநீதம்பிள்ளை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எது எப்படியிருந்தபோதிலும், இறுதிக் கட்ட யுத்தத்தில் மிக ஈனத்தனமான மனித உரிமை மீறல்கள் அரச தரப்பினரால் மட்டு மல்ல, யுத்தத்தின் அகோரத்திலிருந்து தப்ப முயன்ற மக்களை தடுக்க முயன்ற போராளி களாலும் மீறப்பட்டுள்ளதே உண்மையாகும். 'யுத்தம் என்று ஒன்று ஏற்பட்டு விட்டால் உண்மையே அதற்கு முதலில் இரையாகின்றது' என்றே குறிப்பிடப்படுவதுண்டு.

எனவே, இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால யுத்தத்தில் ஆயுதம் ஏந்திய

அனைத்து தரப்பினராலும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட நிலையில், இத்தடவை கொண்டுவரப்படும் ஜெனிவா பிரேரணை இலங்கையில் 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற வகையில், இலங்கையின் மோசமான இறந்த காலத்துக்கு ஒரு நிரந்தரமான முற்றுப்புள்ளியை வைக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.

## இதுவும் நடந்தது!

நடிகர் வடிவேலு நடித்த படங்களின் நகைச்சுவைக் காட்சிகளை எத்தனை முறை வேண்டுமானாலும் திரும்பத்திரும்ப பார்த்து மகிழலாம்.

ஆனால் அவரையே தனது ஒரேயோரு வசனத்தால் திக்குமுக்காட வைத்தவர் நடிகர் என்னாத்தே கண்ணையா. அவரின் அந்த வசனம் மறக்கமுடியாதது.

"வரும் ஆனா வராது..."

இந்த வசனத்தை அவர் பேசும் காட்சி தான் 'இந்தக்' காட்சியைக் கண்டபோதும் வந்தது.

கடந்த சனிக்கிழமை தமிழீழ விடுதலை இயக்கம் என்ற ரெலோ கட்சி தனது முல் லைத்தீவு கிளை அலுவலகத்தை திறந்து வைத்ததுடன் தனது பொதுக்குழுக்கூட்டத் தையும் நடாத்தியிருந்தது.

அந்தக் கூட்டத்தில் தனது புதிய செய லாளராக மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜனா என அறியப்பட்ட கருணாகரன், மிக இளவயதில் பாராளுமன்றம் சென்றவர் என்ற பெருமையைப் பெற்றவர். அத்தகைய சிறப்புக்குரிய ஜனா, தான் கட்சியின் செயலாளராக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களை படித்தபோது என்னாத்தே கண்ணையாதான் மனதில் வந்து போனார்.

ஜனாவின் கருத்துக்களை அப்படியே கீழே தருகின்றேன்.

"தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு, ஒரு முக்கியமான காலகட்டமாக இந்தக் காலகட் டம் இருக்கிறது. கட்சியை பலப்படுத்திக் கொள்ளும் போது, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சி கள், தமிழ் மக்களின் அரசியல் என்பவற்றின் பலம் தானாகவே பலப்படும்.

"தமிழீழ விடுதலை இயக்கம் இன்றும் கூட்டமைப்புக்குள்ளேயே போராடிக் கொண்டிருக்கிறது. கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இன்று 10 தமிழ் கட்சிகளை உருவாக்கி, எங்களையும் சேர்த்துகொண்டு, சில விடயங்களில் செயற் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த கட்சிகள் அனைத்தும் இணைந்து, 'தமிழ்த் தேசிய பேரவை' என்று ஒன்றை உருவாக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலப்பட வேண்டும். பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கான கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

"அத்துடன், தமிழ் மக்களுக்கான, தமிழ்த் தேசியத்துக்கான ஒரே குரலாக பிரிந்து சென்ற கட்சிகளையும் நபர்களையும் இணைத்து தமிழ் மக்களின் போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெ டுக்க வேண்டும்.

தற்போதைய நிலையில், பூகோள அரசியல்நிலையில், தமிழ் மக்களுக்கு வட கிழக்கிற்கு ஒரு தீர்வு கிடைக்கக்கூடிய சூழ் நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. மாகாணசபை தேர்தல் மிகவிரைவில் வரக்கூடிய நிலையில், ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக் கிறது.

அந்தவகையில், நடைபெற்றுக்கொண்டி ருப்பவை அனைத்தும் நமக்கு சாதகமாக நடந்து கொண்டிருக்கின்றது. இதனை நாங்கள் சரியாக பயன்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி, ஒரே குரலாக மக்களின் உரிமைகளை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்"

இதுதான் ஜனா திருவாய் மலர்ந்த வார்த்தைகள்.

பிறகு என்ன? வடக்கு கிழக்கு மாகாணங் களுக்கு தீர்வு கிடைக்கக்கூடிய நிலையை பூகோள அரசியல் நிலைமை உருவாக்கிக் கொண்டிருக்கின்றதே.

இந்த பூகோள அரசியலைக் கையாளக் கூடிய ஒருவரை ரெலோ பொருத்தமான நேரத்தில் தனது செயலாளராக்கியிருக்கிறது. தமிழ் மக்கள் இனி நிம்மதிப்பெருமூச்சு விடலாம்!.

- ஊர்க்குருவி.

# அரசி விலையைக் கூட அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை!

## முன்னிலை சோஷலிசக் கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 23

**நாட்டின் பொருளாதார பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை காணாது அரசாங்கம் அசமந்த போக்குடன் செயற்பட்டு வரு கின்றது என முன்னிலை சோஷலிச கட்சியின் தலைவர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தற்போது வரையில் நாட்டில் பாரியளவான பொருளாதார நெருக் கடிக்கும், பிரச்சினைகளுக்கும் மக்கள் முகம்கொடுத்துள்ளனர். இந்த அரசாங்கமானது நாட்டின் பொரு ளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணாது அசமந்த போக்குடன் செயற்பட்டு வருகிறது. குறைந்தபட் சம் அரிசியின் விலையை கூட கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடியா மலுள்ளது.

அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்து முள்ளந்தண்டுள்ள அரசாங்க மாக செயற்படுவோமென்று ஆட் சிக்கு வந்த ஜனாதிபதியினால் அரிசி மாபியாவை கூட கட்டுப்படுத்த முடியாமலுள்ளது. அரிசியின் பிரச்னை ஒருபுறமிருக்கு சீனியை எடுத்துக்கொண்டால் வரலாற்றில் மாபெரும் ஒரு சீனி மோசடியை செய்த அரசாங்கமாக இந்த அரசாங் கம் மாறியுள்ளது. இதே போல் தான் ஏனைய அனைத்து அத்தியாவசிய பொருட்களும் காணப்படுகின்றன. ஒரு கட்டுப்பாட்டு விலை இன்னும் கொண்டுவரப்படவில்லை.

"கடந்த நாட்களில் பல்வேறு நபர்கள் உட்பட பல சங்கங்களும் அத்தியவசிய பொருட்களுக்கு கட்டுப் பாடு விலையை விதிக்குமாறு குரல் கொடுத்தனர். பல்வேறுபட்ட ஆர்ப் பாட்டங்களில் ஈடுபட்டன. ஆனால் பொருட்களின் விலைகள் அதிகரித்து செல்கின்றதே தவிர குறையவில்லை. இந்த நிலையில் செல்லுமானால் தொடர்ச்சியாக ஒரு கிலோ கிராம் அரிசி 120 தொடக்கம் 130 வரையில் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களு முண்டு. நாட்டு மக்களனைவரும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கும் பிரச்சனைகளுக்கும் முகம்கொடுக்க நேரிடும்.

"இந்த நிலைமைக்கு மத்தியில் இன்று பல துறைகளிலும் ஆர்ப்பாட் டங்களை முன்னெடுக்கின்றனர். அவற்றில் மிக முக்கியமானது யாதெ னில் சுகாதார துறையினரினால் முன்னெடுக்கப்படும் ஆர்பாட்டங் களாகும். தொடர்ச்சியாக 8 மாதங்கள் வரையில் பல கடிதங்களை அனுப்பி தமது கோரிக்கைகளை முன் வைத்துள் ளனர். அவற்றுள் ஒன்று தான் நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரி யுள்ளனர். மற்றொரு பிரச்னை யாதெ னில் கொவிட் கொடுப்பனவுகள் பெறுக்கொடுக்குமாறு வேண்டியுள் ளனர். இது சுகாதார துறையினரினை மாத்திரம் உள்ளடக்காது மருத்துவர்க ளையும் உள்ளடக்கியதாகவே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட் டது" எனவும் அவர் தெரிவித்தார்.

# ஐ.நா. மனித உரிமைகள் விவகாரத்தை இராஜதந்திர ரீதியில் அணுகவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசனை

கொழும்பு, மார்ச் 23

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கள் பேரவை விடயத்தை இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப் பில் பேசிய அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப் பின திஸ்ஸ அத்தநாயக்க, அமர்வின் முடிவில் இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் பொது மக்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என கூறினார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இராணுவமயமாக்கல் போன்ற விடயங்களை எடுத்துக் காட்டுகிறது என குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குறித்த தீர்மானம் பாராட்டத்தக்கதல்ல என்றும் கூறினார்.

எனவே இராணுவமயமாக்கல் குறித்தும் அவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மீறுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது என்றும், இது மோதல்களுக்கு வழிவகுக்கும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

# மஹா கணபதி ஹோம பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்வை மேம்படவும், சுபீட்ச வாழ்வு வேண்டியும் மஹா கணபதி ஹோம பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலயத் தில், காலை 7.30 மணி தொடக்கம் ஹோம பெருவிழா நடக்கும் என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஐ)

# அக்கராயன் வீதி தற்காலிகமாக மூடல்

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்படுவதால், அக்கராயனில் இருந்து 8ஆம் கட்டை வரையின் வீதி தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, காலை 8 மணியில் இருந்து இரவு 10 மணி வரை வீதி மூடப்பட்டிருக்கும்.

அப்பகுதி ஊடாக பயணிக்கும் வாகனங்கள், ஸ்கந்தபுரம், மணி யங்குளம் ஊடாக வன்னேரிக்குளத்துக்குப் பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

68 ஆண்டுகளுக்குப் பின்னர், வன்னேரிக்குளம் வீதி அக்கராய னில் இருந்து புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
23.03.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, பங்குனி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# ஈஸ்டர் தாக்குதல் - தமிழ் ஆயர்களின் நிலைப்பாடு என்ன?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான விசாரணை தொடர்பில் இதற்கு முன்னரும் ‘ஈழநாடு’ சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தது. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இது தொடர்பில் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றார். தற்போது, ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வழங்க அரசாங்கம் தவறினால், நாடு முழுவதும் போராட்டம் இடம்பெறுமென்று அறிவித்திருக்கின்றார். ஈஸ்டர் தாக்குதல், ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியில் பெரியளவில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. ஏனெனில், ஈஸ்டர் தாக்குதல் மீளவும் சிங்கள மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்திய ஒரு தாக்குதல் சம்பவம். அதிலும் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பொன்று இலங்கையில் தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்தியமையானது, சிங்கள மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகளின் தற்கொலை தாக்குதல்களை மட்டுமே அறிந்திருந்த தென்பகுதி சிங்களவர்கள், முதல் முறையாக, இஸ்லாமிய தற்கொலை தாக்குதலை காண நேர்ந்தது. சிங்கள மக்கள் உடனடியாகவே ஆளும் ரணில் - மைத்திரி அரசாங்கத்தின்மீது கோபம்கொண்டனர். மேலும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆளும் ரணில் அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்த கருத்துக்களும், ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்துக்களும் சிங்கள மக்களை எரிச் சலையடையச்செய்தது. முன்கூட்டியே புலனாய்வு தகவல்கள் கிடைத்த போதிலும் தாக்குதலை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றவாறான தகவல்கள், அரசாங்கத்தின்மீதான வெறுப்பை அதிகப்படுத்தியது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஏற்கனவே சரிந்திருந்த ரணில் அரசாங்கத்தின் செல்வாக்கு மேலும் சரிவடைந்தது. இதனை ராஜபக்ஷக்கள் மிகவும் இலகுவாக அறுவடை செய்துகொண்டனர்.

ஆனால், தற்போது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியிருக்கின்ற நிலையில், ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு அது புதிய நெருக்கடியாக மாறியிருக்கின்றது. ஏனெனில், குற்றவாளிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்தவேண்டிய பொறுப்பு தற்போதைய அரசாங்கத்தின் கடமையாகியிருக்கின்றது. ஆனால், மல்கம் ரஞ்சித்தோ, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள்மீது, சந்தேகம் வெளியிட்டுவருகின்றார். கறுப்பு ஞாயிறு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

ஆனால், இதுதொடர்பில் வடக்கு கிழக்கிலுள்ள ஆயர்கள் மற்றும் கத்தோலிக்க மத குருமார்கள் மௌனம் காத்து வருகின்றனர். ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் தண்டிக்கப்படவேண்டுமென்பதில் வடக்கு கிழக்கின் கத்தோலிக்க மதத் தலைவர்களுக்கு அக்கறையில்லையா? வடக்கு கிழக்கில் இடம்பெறும் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் என - பல பிரச்னைகள் தொடர்பிலும் குரலெழுப்பும் இவர்கள், ஒரு சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பின் தாக்குதலில் - பல கத்தோலிக்க, கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டிருக்கின்ற நிலையில், அது தொடர்பான விடயம் பேசுபொருளாக இருக்கின்ற நிலையில், ஏன் மௌனமாக இருக்கின்றனர்? மல்கம் ரஞ்சித்துடன் இணைந்து பயணிக்க விரும்பவில்லையா? இல்லாவிட்டால், மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் (Non RC) என்பதால், அவர்கள் தொடர்பில் வடக்கு கிழக்கு ரோமன் கத்தோலிக்க மதத் தலைவர்கள் அக்கறையை காண்பிக்க விரும்பவில்லையாஓ உண்மையில் இதன் பின்னிதான் என்ன?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் கத்தோலிக்க மதத்தலைவர்களும், மல்கம் ரஞ்சித்தின் போராட்ட அறைகூவலோடு தங்களை இணைத்து கொள்வார்களா, இல்லையா?

# நவநீதம்பிள்ளையின் காலமறிந்த எச்சரிக்கை!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கை அரசுக்கு மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும், இன நல்லிணக்கத்தை பலப்படுத்துவதுடன் யுத்த குற்றங்கள் என்று கண்டறியப் பட்டவை தொடர்பாக நீதி விசாரணைகளை மேற்கொள் வது குறிந்தும் முன்னாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து, மூன்று தசாப்தகால யுத்தத்துக்கு பின்னரான நிலபரங்களை நேரில் பார்வையிட்டவரே நவநீதம்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.



எனவே, சர்வதேச நீதிமன்றில் ஒரு நீதியரசராகவும் பணியாற்றிய நவநீதம்பிள்ளை, சர்வதேச குற்றவியல் நடவடிக்கைள் தொடர்பாக நிறையவே அனுபவமுடையவராக இருக்கின்றார். இந்தியாவின் தமிழகத்தை பூர்வீகமாகக்கொண்டு, தென்னாபிரிக்காவில் வாழ்ந்த குடும்பத்தில் பிறந்த நவநீதம்பிள்ளை, தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியான நெல்சன் மண்டெலாவினால் தென்னாபிரிக்க உயர் நீதிமன்றின் முதலாவது பெண் நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

**மண்டெலாவின் கௌரவத்தை பெற்றவர்**

நவநீதம்பிள்ளையைப் பொறுத்தவரை தென்னாபிரிக்காவில் தனிப்பட்ட முறையிலும், அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த நெல்சன் மண்டெலாவைப்போல, வெள்ளையர் ஆட்சி தென்னாபிரிக்காவில் நிலவிய வேளையில் அங்கு அடக்கு முறைக்குள்ளானவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும், நெல்சன் மண்டெலாவினால் தென்னாபிரிக்காவில் அவரது தகைமைக்குரிய தகுதி வழங்கப்பட்ட நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பணியாற்றியதோடு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராகவும் நவநீதம்பிள்ளை பணியாற்றியிருந்தார். அத்துடன், ருவாண்டா நாட்டில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக விசாரணைசெய்த நீதிமன்ற நீதிபதியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, தென்னாபிரிக்காவில் ஒடுக்கு முறைக்குள்ளான ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற வகையிலும், சர்வதேச குற்றவியல் விசாரணைகளை நடத்துவதில் அனுபவமுள்ளவர் என்ற வகையிலும் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விடுத்துள்ள எச்சரிக்கை காலமறிந்ததாகவே இருக்கின்றது. வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில் ‘தமிழர் தாயகத்தை இழத்தல் மற்றும் தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை இனம் காணுதல்’ என்ற தலைப்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இணையவழி மகாநாட்டிலேயே நவநீதம்பிள்ளை தனது எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

**இனப் படுகொலை**

நவநீதம்பிள்ளை மேலும் பேசியபோது, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் எப்போதுமே இனப்படுகொலை என வரையறை செய்யப்பட்டவையாகவே இருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் நிலவிய மூன்று தசாப்தகால வடக்கு - கிழக்கு யுத்தம் என்பது ஓர் இனரீதியான ஒடுக்கு முறையாகவே காணப்பட்டது. வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்ற முறையை நோக்கும்போது ஓர் உரிமைப்போராட்டம், விடுதலைப்பேராட்டம் என்று அதற்கு அர்த்தங்கள் கற்பிக்கப்பட்ட நிலையில், இறுதியில் எந்தவோர் இலக்கையும் அடையாததாக வெறுமனே மனித அவலங்களுக்கே வடக்கு-கிழக்கு யுத்தம் வழியமைத்திருந்தது.

**சகோதர படுகொலைகள்**

இலங்கை அரசை நவநீதம்பிள்ளை இனப்படுகொலைகள் தொடர்பாக எச்சரித்துள்ளார். ஆனால், எண்பதுகளின் ஆரம்பத்தில் வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பித்தவேளை முதல் போராட்டத்தில் குதித்த பல்வேறுபட்ட தமிழ் ஆயுதப்போராட்ட அமைப்புகளிடையே நிலவிய மூர்க்கத்தனமான பகைமையை நோக்கும்போது, இலங்கை அரசுமீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் எம்மாத்திரம் என்றுகூட எண்ணத்தோன்றும். ஒரே நோக்கத்துக்காக போராடிய எண்ணிலடங்காத தமிழ் போராளிகள் மாற்று இயக்கங்களால் மூர்க்கத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டமையைக்கூட மிக மோசமான மனித உரிமை மீறலாகவே கருத முடியும்.

ரெலோ இயக்கத்தின் தலைவர் ஒரு புகையிலைத் தோட்டத்தினுள் ஒளிந்திருந்து வெளியே வந்து, பின்னர் தன்னை சுற்றி வளைத்தவர்களிடம் சரணடைந்தபோது, துடிதுடிக்க படுகொலை செய்யப்பட்டமைகூட ஓர் அப்பட்டமான மனிதப்படுகொலை என்றே குறிப்பிடமுடியும்.

இதுதவிர, நல்லூரில் ‘கந்தன் கருணை’ என்ற இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராளிகள் பலர் ஒரே இரவில் படுபாதகமான முறையில், அவர்களைத் தடுத்து வைத்திருந்தவர்களால் படுகொலை செய்யப்பட்டமைகூட அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் என்றே குறிப்பிட முடியும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மார்ச் 23 செவ்வாய்க்கிழமை**
**சார்வரி வருடம் - பங்குனி 10**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 3.00 - 4.30 |
| திதி | : | தசமி |




**மேடம்**
நேர்மறை எண்ணங்களால் மற்றவர்களை கவர்வீர்கள். மனம் மகிழும். குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையில் வாக்குவாதம் வேண்டாம்.

**இடபம்**
இன்று சிலர் புது வீடு கட்ட ஆரம்பிப்பீர்கள். திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக முடியும். புதுத் தெம்பு பிறக்கும். சொத்து விவகாரம் சுமுகமாகும்.

**மிதுனம்**
பெண்கள் வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. கணவரின் போக்கு மகிழ்ச்சி தரும். வருமானம் கூடும். காலநேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரும்.

**கடகம்**
பணியிடத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் நன்மை வரும். எதிலும் நிதானமாகச் செயல்பட்டு நன்மை அடைவீர்கள். கவலை நீங்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்**
பணவரவு உண்டு. முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். மேலதிகாரியிடம் சரிசமமாகப் பேசும் வாய்ப்புக் கிடைத்து மகிழ்வீர்கள். பணியில் இருந்து வந்த தடை, தாமதங்கள் நீங்கும்.

**கன்னி**
பழுதான மின்சார சாதனங்களைச் சரி செய்வீர்கள். உங்களின் எதிர்காலத் திட்டங்களை விரிவுபடுத்துவீர்கள். வேலையாட்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**துலாம்**
முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் வந்து பின் தெளிவீர்கள். கவலை தீரும். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம். பணத்தட்டுப்பாடு வந்து நீங்கும். மனம் மகிழும்.

**விருட்சிகம்**
வீடு வாங்குவதில், விற்பதில் லாபம் வரும். மனம் மகிழும். பிரச்னையில் மாட்டாமல் அமைதியாக ஒதுங்கினால் நல்லது. எதிலும் மிகுந்த கவனமாகச் செயல்பட்டால் பிரச்னை வராது.

**தனுசு**
உங்களின் அறிவுத்திறனால் நன்மைகளைக் காணப்போகிறீர்கள். விலகிச் சென்ற பழைய நண்பர்கள் மீண்டும் வந்திணைவர். அலுவல கத்தில் உங்களைப் பற்றிக் குறை கூறியவர்கள் மாறுவர்.

**மகரம்**
உடல் நிலையில் இருந்த பிரச்னை சரியாகும். வெளிநாட்டில் இருந்து பரிசுகள் உங்களைத் தேடி வரும். பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபட முடியாது.

**கும்பம்**
சுபச்செலவுகள் ஏற்படும். கலை ஆர்வம் வரும். நண்பர்களை சந்திப்பதால் மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். பணியிடத்தில் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

**மீனம்**
இளைஞர்கள் வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வெளியூரில் உள்ள பிள்ளைகளிடம் இருந்து நற்செய்தி வரும். உறவினர், நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

# மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையாவது தக்கவையுங்கள்

## ஸ்டாலினுக்கு முதல்வர் அறிவுரை



சென்னை, மார்ச் 23

**மீண்டும் எதிர்க்கட்சி அந்தஸ்தையாவது தக்க வைத்துக்கொள்ள தி.மு.க தலைவர் ஸ்டாலின் முயற்சிக்க வேண்டும் என முதல்வர் பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார்.**

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டப்பேரவைத் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடும் உயர் கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகனுக்கு ஆதரவு கோரி தமிழக முதல்வர் பழனிசாமி நேற்று பாலக்கோட்டில் பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் தெரிவிக்கையில்-

தமிழகத்தில் பல ஆண்டு காலம் தி.மு.க ஆட்சியில் இருந்தது. அதேபோல, மத்தியில் ஆட்சியில் இருந்த கட்சியினருடனும் தி.மு.க கூட்டணியில் இருந்தது. ஆனாலும், தமிழக மக்களுக்கு இதன் மூலம் எந்தப் பயனும் ஏற்படவில்லை. அ.தி.மு.க அரசு சிறுபான்மையினருக்கு எதிரானது என்பது போல தி.மு.க சார்பில் பொய்ப் பிரசாரம் செய்யப்படுகிறது. அ.தி.மு.க எப்போதும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் இஸ்லாமியருக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டுள் ளன.

சிறுபான்மையினர் உள்ளிட்ட தமிழக மக்களுக்கு எண்ணற்ற நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழகத்தில் சிறுபான்மை மக்களிடையே அ.தி.மு.கவினர் ஒற்றுமையோடு இருப்பதைச் சீர்குலைக்க தி.மு.க முயற்சித்து வருகிறது. அ.தி.மு.க என்றைக்கும் சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பாகவும், அரணாகவும் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியினரைக்குறைத்து மதிப்பிட்டுப் பேசுவது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஸ்டாலின் ஈடுபட்டு வருகிறார். இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிட்டு மாற்றுக்கட்சியினருக்கு ஸ்டாலின் மதிப்பளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் மீண்டும் திமுக எதிர்க்கட்சியாகவர ஸ்டாலின் முயற்சிக்க வேண்டும். மீண்டும் எதிர்க்கட்சி அந்தஸ்தையாவது அவர் தக்கவைத்துக் கொள்ள வேண் டும்-என்றார்.

# மனவேதனையில் உள்ளேன் இந்தத் தேர்தலே வேண்டாம்

## மன்சூர் அலிகான் கூறுகிறார்



சென்னை, மார்ச் 23

மன வேதனையில் இருக்கிறேன். இந்தத் தேர்தலே வேண்டாம் என்று கிளம்பிவிட்டேன் என்று நடிகர் மன்சூர் அலிகான் தெரிவித்தார். நாம் தமிழர் கட்சியில் இருந்த நடிகர் மன்சூர் அலிகான், அதில் இருந்து வெளியேறி, 'தமிழ் தேசியப் புலிகள் கட்சி' என்ற புதிய கட்சியைக்கடந்த மாதம் தொடங்கினார். அதைத் தொடர்ந்து கோவை தொண்டாமுத்தூர் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட முடிவு செய்தார்.

பேரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அவர் மார்ச் 18ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்தார். அப்போது 'தேர்தலில் மிகப் பெரிய சவால் இருந்தாலும், துணிச்சலுடன் சுயேச்சையாகப் போட்டியிடுகிறேன்' என்று தெரிவித்தார்.

அதையடுத்து பூங்காக்கள், மீன் மார்க்கெட், கோயில் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று, தொடர்ச்சியாகப் பிரசாரத்திலும் ஈடுபட்டார்.

இந்நிலையில் திடீரென நேற்று முன் தினம் மாலை போட்டியிடப் போவதில்லை என்று மன்சூர் அலிகான் அறிவித்தார்.

இது தொடர்பாகக் கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ''இந்தத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று முடிவெடுத்துள்ளேன். மன வேதனையுடன் இருக்கிறேன்.

எங்கே சென்றாலும் 'பாய், எவ்வளவு பணம் வாங்கிவிட்டீர்கள்?' என்று தொடர்ச்சியாகக் கேட்கிறார்கள். 'பாய் வாக்கைப் பிரிப்பதற் காகத்தானே தேர்தலில் நிற்கிறீர்கள்?' என்றும் கேட்கின்றனர்.

கெட்ட பெயருடன் நாம் இருக்கக்கூடாது. ஒன்றுமே புரியவில்லை. இந்தத் தேர்தலே நமக்கு வேண்டாம் என்று சென்னைக்குக் கிளம்பிவிட்டேன்-என்றார்.

# சிந்தனை இல்லாதவர்களிடம் ஆட்சி அதிகாரம் சிக்கியுள்ளது

## சீமான் விசனம்

சென்னை, மார்ச் 23

எதைக் கொடுத்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்ற சிந்தனையே இல்லாதவர்களிடத்தில் 50 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரம் சிக்கிக்கொண்டுள்ளதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

போடி வள்ளுவர் சிலைக்கு அருகில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், ' இந்த ஆட்சியாளர்களுக்கு தமிழ்மொழி குறித்தோ, தமிழர்களின் வரலாறு குறித்தோ, பண்டபாடு குறித்தோ கவலை இல்லை.

அவர்களுக்கு இருக்கும் ஒரே நோக்கம் அரசியலுக்கு வருவது, பணம் சம்பாதிப்பது, பணத்தை பதுக்கி வைப்பது, மீண்டும் தேர்தல் வரும்போது வாக்குக்கு காசு கொடுப்பது மட்டுமே.

நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ அ.தி.மு.க, திமுகவிடம் இருந்து விடுதலை பெற வேண் டும்-என்றார்.

# அ.தி.மு.கவினர் தமிழகத்தையே விரைவில் விற்றுவிடுவார்கள்

## உதயநிதி ஸ்டாலின் பேச்சு

மதுரை, மார்ச் 23

அ.தி.மு.கவினர் மூன்று ஆண்டுகளாக மோடியிடம் அத்தனை உரிமைகளையும் அடகு வைத்துவிட்டனர். இன்னும் சொல்லப்போனால் தமிழகத்தையே விற்றுவிடுவார்கள் என்று உதயநிதி ஸ்டாலின் விமர்சித்தார்.

மதுரையில் தி.மு.க கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேற்றுக் காலை உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குக் கேட்டு பிரசாரம் செய்தார். மேலும் மதுரை வடக்கு சட்டப்பேரவைத் தொகுதி தி.மு.க வேட்பாளர் கோ.தளபதியை ஆதரித்து மதுரை செல்லூர் 50 அடி ரோட்டில் உதயநிதி ஸ்டாலின் பிரசாரம் செய்தார்.

இந்த இடங்களில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

இதே தொகுதியில் சென்ற முறை பாராளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியைத் தேடித் தந்தீர்கள். சேப்பாக்கம் தொகுதியில் முதன் முதலாக நிற்கிறேன். இதுதான் எனக்கு முதல் வாய்ப்பு. வெறும் 5 நாட்கள் மட்டுமே அங்கு பிரசாரம் செய்துவிட்டு இங்கு உங்களைத் தேடி வந்திருக்கிறேன்.

அ.தி.மு.கவினர் மூன்று ஆண்டுகளாக மோடியிடம் அத்தனை உரிமைகளையும் அடகு வைத்து விட்டனர், அடிமையாகிவிட்டனர். இன்னும் சொல்லப்போனால் தமிழகத்தையே விற்றுவிடுவார்கள். மக்கள் உரிமை பறிபோகும் நிலை ஏற்படும், தமிழகத்தில் எடுபிடியாக உள்ள எடப்பாடி எப்படி முதல்வர் ஆனார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் பதவிக்காக நான் ஊர்ந்து போக என்ன பல்லியா? பாம்பா எனக் கேட்டுள்ளார், அவரைப் பற்றி சசிகலாவிடம் கேட்டால் தெரியும்-என்றார்.



# யாழ்ப்பாணத்தில் நியமனம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்குட்பட்ட விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் டடட இல் 69 ஆளணியினருக்கான நியமனம், வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் டடட மற்றும் பயிற்சித்தரத்தில் 53 ஆளணியினருக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு.அ. சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்துகொண்டு நியமனங்களை வழங்கினார்.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ. பத்திநாதன், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் ஆகியோர் கலந்துகொண்டதுடன் விருந்தினர்களாக மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாணப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# பாராளுமன்று அனுமதி அளித்தால் இரு மாதங்களுள் மாகாண தேர்தல்!

## தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 23**

**“பாராளுமன்றத்தில் சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் 2 மாதங்களுக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் ஜீ.புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

மாகாணசபைகளுக்கான தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்தி முடிக்க முடியுமா என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய சட்டத்தின் பிரகாரமா அல்லது புதிய சட்டத்தின் பிரகாரமா நடத்துவது என்பது தொடர்பில் முடிவெடுத்து அதற்கு தேவையான சட்டத்திருத்தத்தை அரசு பாராளுமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு மேற்கொண்ட பின்னர் சுகாதார வழிகாட்டல்களையும் கருத்திற்கொண்டு இரண்டு அல்லது இரண்டரை மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடியும். ஏற்கனவே ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் என்பன சுகாதார வழிகாட்டல்களுக்கு மத்தியிலேயே நடைபெற்றுள்ளது. எனவே, தேர்தலை நடத்துவது சவாலாக அமையாது.

மாகாணசபை பொறிமுறை இயங்கினாலும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவேண்டும். அதற்காகவே விரைவில் சட்டத்திருத்தத்தை செய்து தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை தேர்தல் ஆணைக்குழுவும் முன்வைத்துள்ளது- என்றார்.

# தனிவழி செல்கிறார் விமல்?

கொழும்பு, மார்ச் 23

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ அதிரடியான அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

அவரது தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு தீர்மானத்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் முன்னணியின் அரசியல் சபைக்குள் கலந்துரையாடப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பொதுஜன பெரமுனவின் தலைவராக நியமிக்கவேண்டும் என விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து ராஜபக்ஷர்களுக்கு இடையிலும் அரசாங்கத்துக்குள்ளும் பொதுஜன பெரமுனவுக்குள்ளும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்கள் முன்னணிக்கும் அரசுக்கும் ‘டீல்’ ஏதும் கிடையாது

## அறிவிப்பு விடுத்தார் ராதா

கொழும்பு, மார்ச் 23

“மலையக மக்கள் முன்னணி ஒரு போதும் அரசாங்கத்துடன் இணையாது. அரவிந்தகுமார் எம்.பியை நீக்கியதன் மூலம் தமிழ் முற்போக்கு கூட்டணியில் ஏற்பட்டிருந்த சிறு விரிசலும் முடிவுக்கு வந்துள்ளது. எனவே, கூட்டணியாக பயணிப்போம்.” என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பியை கட்சியை விட்டு நீக்குவதற்கும், அவர் வகிக்கும் பதவிகளை பறிப்பதற்கும் மலையக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு மத்திய செயற்குழு மற்றும் தேசிய சபை ஆகியன ஒப்புதல் வழங்கிய பின்னர் இவ்விவகாரம் தொடர்பில் இராதாகிருஷ்ணன் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழு மற்றும் தேசிய சபையின் கூட்டம் கூடியது. இதன்பிறகே இந்த கருத்தை இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:

”தெரிந்து துரோகம் செய்தவர்களிடம் நியாயம் கேட்காதே, அவர்கள் செய்த தவறுக்கு ஆயிரம் பதில்களை சொல்வார்கள் என ஹிட்லர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி அரவிந்தகுமார் எம்.பியும் தெரிந்தே தவறு செய்துள்ளார். அந்த தவறை திருத்திக் கொள்வதற்காக எம்மால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை அவர் ஏற்கவில்லை. அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு பகிரங்கமாக மன்னிப்பு கோருமாறு கேட்டோம். அவர் அதனை செய்யவில்லை.

இந்நிலையில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை நாம் படிப்படியாக முன்னெடுத்தோம். இதனால் சிறு தாமதம் ஏற்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியிலுள்ள இதர பங்காளிக்கட்சிகள் கேள்வி எழுப்பின. அதிருப்தியையும வெளியிட்டன. தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மேற்படி தரப்புகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கட்சிகளும் குறித்த தீர்மானத்தை வரவேற்றுள்ளன.

அதேபோல அரவிந்தகுமார் எம்.பியை நான்தான் வழிநடத்துகின்றேன், அவருக்கு பின்னால் செயற்படுகின்றேன். அரசுடன் டீல் இருப்பதால்தான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, எடுக்கவும்படாது என சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர். இதனால் எனக்கும் களங்கம் ஏற்பட்டது. தற்போது அந்த களங்கமும் நீங்கியுள்ளது .

எனக்கு அரசுடன் ‘டீல்’ இல்லை . எமது கட்சி அரசுடன் இணையாது. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பயணிக்கும். தமிழ் முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம். அரவிந்தகுமார் எம்.பியால் சிறு விரிசல் ஏற்பட்டிருந்தது. தற்போது அதுவும் முடிவுக்கு வந்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் இருந்து சந்தா வசூலிக்கப்படாலும் கடந்தகாலங்களில் அது கட்சிக்கு வந்துசேரவில்லை. பதுளையில் கட்சி கூட்டங்களும் இடம்பெறவில்லை. எனவே, வருமானம் முக்கியமல்ல. எமது கட்சியை அங்கு பலப்படுத்தவேண்டும். அதற்காக கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைய வேண்டும்- என்றார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

இந்தியன் செலக்‌ஷனின்

புத்தாண்டு விசேட தள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்



இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

காலம்: 20.03.2021 – 13.04.2021 வரை

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி இல்லையேல் நாடு முழுவதும் போராட்டம் வெடிக்கும்!

## அரசுக்கு கர்தினால் மல்கம் எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 23**

**2021 ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க அரசாங்கம் தவறினால் நாடு முழுவதும் போராட்டங்கள் இடம்பெறும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**



நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆராதனையின் பின்னர் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

ஆணைக்குழுவால் குற்றவாளிகள் எனப் பெயரிடப்பட்டவர்கள் மீது இந்த நேரத்துக்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், போராட்டம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த சம்பவத்துக்கு நீதி வழங்கப்படும் வரை பொதுமக்கள் தரப்பில் எப்போதும் நிற்பேன் என்றும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

# மின்சார வசதியற்ற வீடுகளுக்கு இந்த வருடத்துக்குள் மின்சாரம்

கொழும்பு, மார்ச் 23

ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு மின்சார இணைப்பை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுவதாக வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

50 ஆயிரம் சமூர்த்திக் குடும்பங்களும், குறைந்த வருமானம் பெறும் 25 ஆயிரம் குடும்பங்களும் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்களின் நாளாந்த வாழ்க்கையை சீரான முறையில் பேண முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். சுபீட்சத்தின் தொலைநோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய தேசத்திற்கு ஒளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் மக்களின் நலனைக் நோக்காகக் கொண்டு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# ஊழியரின் உயிரை பறித்த வாழைப்பழம்

கொழும்பு, மார்ச் 23

வாழைப்பழம் ஒன்றினால், ஹோட்டல் ஊழியரின் உயிர், அநியாயமாக காவுக்கொள்ளப்பட்ட சம்பவமொன்று, குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்த ஹோட்டலில் வாழைப்பழமொன்றை கொள்வனவு செய்த நுகர்வோர், வாழைப்பழத்தின் விலை அதிகம் என ஹோட்டலில் குழப்பம் விளைவித்துள்ளார்.

அந்த வாழைப்பழத்தின் உண்மையான பெறுமதி 30 ரூபாயாகும். அதனையே ஹோட்டல் உரிமையாளரும் தெரிவித்துள்ளார். எனினும், விலையை ஏற்றுக்கொள்வதற்கு நுகர்வோர் மறுத்துவிட்டார்.

வாழைப்பழத்தின் விலையைக் கேட்டு கடுமையாக கோபமடைந்த அந்த நபர், வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், கைகலப்பிலும் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது விவரத்தை கேட்பதற்கு ஹோட்டல் ஊழியர் வருகை தந்துள்ளார். அப்போது, அங்கிருந்த போத்தலொன்றை உடைத்து குத்திவிட்டு அந்நபர் தப்பியோடிவிட்டார். அவ்வாறு ஓடியவர், தொலைபேசி கூடாரமொன்றுக்குள் மறைந்துகொண்டார்.

எனினும், அங்கிருந்தவர்கள் அவரை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

போத்தல் குத்துக்கு இலக்கானவர், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துவிட்டார்.

# ரஞ்சனின் மனு தள்ளுபடி

கொழும்பு, மார்ச் 23

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்யுமாறு ரஞ்சன் ராமநாயக்கவின் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வில் இந்த மனு விசாரணைக்கு வந்தபோதே அதனை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க தற்போது அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



# அகழ்வுப் பணியை எதிர்த்து சுழற்சி முறை போராட்டம்!

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அகழ்வுப் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்த சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று ஆரம்பமானது.

குறித்த ஆலய வளாகத்தில் அகழ்வுப் பணிகள் நேற்று ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் காலை முதல் ஆலய வளாகத்தில் எதிர்ப்பு தெரிவித்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 127 பேர் நேற்று வீடுகளுக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த இலங்கையர்கள் 127 பேர் தனிமைப் படுத்தல் காலம் நிறைவடைந்ததை அடுத்து நேற்று தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் 52-ஆவது தரைப் படைத் தலைமையகம் மற்றும் 512 ஆவது காலாட் படைப் பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் வயாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த டுபாய், சவுதி அரேபியா, மலேசியா, மியான்மார், எகிப்து மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்தவர்களே நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் உள்ள தமது வீடுகளுக்கு செல்வதற்குரிய போக்குவரத்து உள்ளிட்ட வசதிகள் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

52 ஆவது படைகளின் தளபதி கேணல் மகேன் சல்வத்துர, 512ஆவது காலாட் படைகளின் தளபதி, 512ஆவது காலாட் படைகளின் அலுவலக பொறுப்பதிகாரி ஆகியோர் இவர்களை வழியனுப்பும் நிகழ்வில் பங்கேற்று தனிமைப்படுத்தல் சான்றிதழ்களை வழங்கினர்.

# கோப் குழுவில் முன்னிலையாக கிரிக்கெட் சபைக்கு அழைப்பு

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் 06ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப்) மீண்டும் முன்னிலையாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி கிரிக்கெட் சபை கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகள் உரிய தயார்ப்படுத்தலுடன் வருகை தராத காரணத்தால் அந்தக் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு மீண்டும் ஒரு மாதத்தில் குழு முன்னிலைக்கு ஆஜராகுமாறு பணிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையிலான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஏழு அரசாங்க நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கமைய மார்ச் 23ஆம் திகதி லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனம் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருப்பதுடன், இலங்கையில் புதிய ஏற்றுமதி செயல்பாட்டு வலயங்களை அமைக்கும் நடவடிக்கைகள் குறித்த மதிப்பீடு பற்றி மார்ச் 24ஆம் திகதி இக்குழுவில் ஆராயப்படவுள்ளது.

பேராதனை பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம் எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி கோப் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதனைவிடவும், ஏப்ரல் 07ஆம் திகதி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையும், ஏப்ரல் 20ஆம் திகதி இலங்கை உதைபந்து சம்மேளனம் மற்றும் ஏப்ரல் 23ஆம் திகதி தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் என்பன அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

# பயணிகள் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் சாரதிகளுக்கு புதிய லைசன்ஸ்

கொழும்பு, மார்ச் 23

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனச் சாரதிகளுக்கு புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, தற்போது கனரக வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் சாரதிகள், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு புதிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வது அவசியம் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலம் அமுனுகம தெரிவித்தார்.

இந்த சாரதி அனுமதிப் பத்திரம் இரண்டு வார பயிற்சி காலத்துக்குப் பிறகு சாரதிகளுக்கு வழங்கப்படும் என திலும் அமுனுகம தெரிவித்தார்.

தற்போது மாகாணங்களுக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள பஸ் சாரதிகளுக்கு, புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செயல்முறை அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் கூறினார்.

# ரயில் கடவை விபத்துக்கு நீதி கோரி தலைமன்னாரில் நேற்று போராட்டம்

## பாடசாலை மாணவர்கள், கிராம மக்கள் வீதியில்

மன்னார், மார்ச் 23

தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள ரயில் கடவையில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் தனியார் பஸ்ஸூம் ரயிலும்மோதி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த மாணவனின் மரணத்துக்கு நீதி கோரி நேற்று திங்கட்கிழமை காலை அந்தப் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமத தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த விபத்தில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வந்த பாலச்சந்திரன் தருண் (வயது-14) என்ற மாணவன் உயிரிழந்ததோடு, மாணவர்கள் பொது மக்கள் என 25 பேர் வரை பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில் குறித்த விபத்திற்கு நீதி கோரி நேற்றுக் காலை 7.45 மணியளவில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்



கலவன் பாடசாலைக்கு முன்பாக போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள ரயில் கடவை வரை பதாதைகளை ஏந்தியவாறு சென்றனர்.

இதன் போது போராட்டம் இடம் பெற்ற பகுதிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலாளர், ரயில் திணைக்கள அதிகாரி ஆகியோர் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினர்.

இதன்போது பல்வேறு கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன் வைத்தனர்.

குறிப்பாக குறித்த ரயில் கடவைக்கான தடையை புதிதாக அமைத்து, அதற்கான பாதுகாப்பு ஊழியரை நியமிக்கவேண்டும், குறித்த ரயில் கடவையில் பொலிஸாரின் கண்காணிப்பு இடம் பெற வேண்டும் என போராட்டக்காரர்கள் கோரினர்.

இதன்போது குறித்த கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய உடனடியாக துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

இதனை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# டிப்பரில் ஏற்றி கடத்த முயன்ற 200 கிலோ கஞ்சா சிக்கியது!

## வடமராட்சி கிழக்கில் இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 23

கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆழியவளை பகுதியில் 200 கிலோ கஞ்சாப் பொதிகள் டிப்பர் வாகனத்தில் ஏற்றப்படும் போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை படகு ஒன்றின் மூலம் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட கஞ்சாப் பொதிகள் ஆழிய வளை கடற்கரையில் டிப்பர் வாகனத்தில் ஏற்றப்பட்டன.

அவ்வேளை வாகனத்தைச் சுற்றிவளைத்த கடற்படையினர் கஞ்சாப் பொதிகளை கைப்பற்றியதோடு சம்பந்தப்பட்ட நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளுடன் கைதான நபர்கள் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நேற்று முதல் அரச நியமனம்

கொழும்பு, மார்ச் 23

நேற்று முதல் மேலும் பட்டதாரிகள் 10,000 பேருக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 60ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நல்லாட்சியில் நியமனம் வழங்கப்பட்ட 14ஆயிரம் பயிற்சிப் பட்டதாரிகளில் 10,000 பேரை நிரந்தர சேவையில் இணைக்க நேற்று முதல் நடவடிக்கை எடுத்துள்ளோம். கொரோனா தொற்றினால் அவர்களை அரச சேவைக்கு இணைக்கும் பணி தாமதமானது.

அவர்களின் ஆவணங்களை பெற்று நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மாவட்ட செயலாளர் அலுவலக மட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்படும். இவர்களின் பெயர்ப்பட்டியல் அமைச்சு இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது-என்றார்.

# அமரபுர நிக்காய மகாநாயக்கர் காலமானார்

கொழும்பு, மார்ச் 23

இலங்கை அமரபுர மகா நிக்காயவின் உயர்பீட மகாநாயக்கர் கொட்டுகொட தம்மாவாச தேரர் காலமானார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் காலமானதாக தெரிவிக்கப்படுகின்றது.

1933 ஆம் ஆண்டு பிறந்த கொட்டுகொட தம்மாவாச தேரர் தமது 88ஆவது வயதில் காலமானார்.

# கழிவு தேயிலை களஞ்சியசாலை பூண்டுலோயாவில் சுற்றிவளைப்பு

கொழும்பு, மார்ச் 23

பூண்டுலோயா கும்பாலொலுவ பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த கழிவுத் தேயிலை களஞ்சிய சாலை ஒன்றை சுற்றிவளைத்த தலவாக்கலை விசேட அதிரடிப்படையினர், 4 ஆயிரத்து 195 கிலோ கழிவு தேயிலையை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

கழிவு தேயிலை குறித்த நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு, தூய தேயிலை என்ற போர்வையில் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பட்டுள்ளது என விசேட அதிரடிப்படையினர் தகவல் வெளியிட்டனர்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட கழிவு தேயிலைத் தூளையும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைகளின் நிமித்தம் பூண்டுலோயா பொலிஸாரிடம், விசேட அதிரடிப்படையினர் கையளித்தனர்.

# வவுனியா சிங்கள பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட பெற்றோரால் குழப்பம்

வவுனியா, மார்ச் 23

வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி தெற்கு பிரதேச செயலகம் நேற்று முற்றுகையிடப்பட்டது.

அண்மையில் அரசாங்கத்தால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட 6 பேர் மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் பாடசாலை தவணை விடுமுறையையடுத்து அவர்கள் வேறு செயற்திட்டத்திற்காக மீள அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் தமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தை நேற்று முற்றுகையிட்டிருந்தனர்.




ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் பின்னதங்கி உள்ளன. எனவே ஆசிரியர் வெற்றிடத்தை நிரந்தரமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கையை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முற்றுகையிட்ட மக்கள் பிரதேச செயலகத்தின் நிர்வாக கட்டடத்துக்குள் சென்றமையால் சற்றுநேரம் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பிரதேச செயலாளர் போராட்டக்காரர்களுடன் முன்னெடுத்த பேச்சை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன், நிலைமை சுமூகமாகியது.

# மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் தாதியரை அறைக்குள் பூட்டிய வைத்தியர்

கொழும்பு, மார்ச் 23

மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலையில் இரண்டு தாதியர்களை கதிரியக்க அறைக்குள் வைத்து பூட்டிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மஹரமக பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பாக இதுவரை கதிரியக்க நிபுணர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

வைத்தியசாலையின் இரு தாதியர்களும் கதிரியக்க அறையில் சுமார் ஒரு மணிநேரம் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அதனால் அவர்கள் உடல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகியிருக்கலாம் என்றும் சந்தேகம் எழுந்துள்ளது.

# இலங்கை புர்கா தடை விவகாரம்

# அரசின் முடிவுக்கு வலுக்கும் எதிர்ப்பு

இலங்கை முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதை தடை செய்யும் வகையிலான அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் அண்மையில் அதிகளவில் பேசப்பட்டது. எனினும், சர்வதேச ரீதியில் ஓரிரு தினங்கள் அதிகளவில் பேசப்பட்ட இந்த விடயம், திடீரென மௌனமாகியது.

இலங்கை முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதை தடை செய்யும் வகையிலான அமைச்சரவை பத்திரத்தில் தான் கையெழுத்திட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கடந்த 13ஆம் திகதி களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், இந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

இதையடுத்து, புர்கா அணிவதை தடை செய்யும் விவகாரம், சர்வதேச ரீதியில் அதிகளவில் பேசப்பட்டது.



ஏற்கெனவே, கொவிட் தொற்றினால் உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை (உடல்களை) அடக்கம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் சுமார் ஒரு வருடமாக மறுப்பு தெரிவித்து வந்தது.

இந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் ஆர்ப்பாட்டங்கள், கோரிக்கைகள், அழுத்தங்களுக்கு மத்தியில், ஜனாஸாக்களை அடக்கம் செய்ய தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஜனாஸா விவகாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னரான காலத்தில், தற்போது புர்கா தடைக்கான யோசனை முன்வைக்கப்பட்டு, நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் புர்காவுக்கு தடை ஏற்படுத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அறிவித்திருந்த நிலையில், மீண்டும் எதிர்ப்பு வலுப்பெற்று வருகிறது.

புர்கா தடை ஏற்படுத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட கருத்தை அடுத்து, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறான நிலையில், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் இலங்கை விஜயத்தின் பின்னரே, ஜனாஸா அடக்கத்திற்கான அனுமதியை இலங்கை வழங்கியதாகவும், பாகிஸ்தான் தூதுவரின் எதிர்ப்புக்கு பின்னர் புர்கா தடைக்கான பேச்சு நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இஸ்லாமிய சமூகத்தினர் கருத்து வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் துணைத் தலைவர் ரஸ்மின், பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

புர்காவுக்கு தடை விதிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்ததை அடுத்து, பாகிஸ்தான் தூதுவர் ட்விட்டர் பதிவொன்றை வெளியிட்டிருந்ததாக ரஸ்மின் குறிப்பிடுகின்றார்.

புர்கா அணிவது தமது மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட ஒன்று என கூறும் ரஸ்மின், புர்காவிற்கு இலங்கை அரசாங்கம் தடை விதிப்பதை ஒரு இஸ்லாமிய சமூகமாக தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளார். இஸ்லாமிய மார்க்கத்தில் முகத்திரை அணிவது தடை செய்யப்பட்ட ஒன்று எனவும் அவர் கூறுகிறார்.

முகத்திரை அணிவது என்பது நபிகள் நாயகத்தின் மனைவிகளுக்கு மாத்திரம் உள்ள சட்டம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை தாம் விழிப்புணர்வின் ஊடாக மக்களிடையே தெளிவூட்டுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

எனினும், அரசாங்கம் இவ்வாறான சட்டங்களை கொண்டு வருவதை தாம் ஆதரிக்க முயற்சிக்கும் போது, நாளை மேலும் பல்வேறு விடயங்களுக்கு தடை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் ரஸ்மின் கூறுகிறார்.

இதேவேளை புர்கா தடையானது, அரசாங்கம் இனவாத ரீதியில் எடுத்த ஒரு தீர்மானம் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.




இந்த ஆடையின் ஊடாக பாதுகாப்புச் பிரச்னைகள் தோன்றினால், வேறு விதத்தில் கலந்துரையாடல்களை நடத்தி, அதற்கான தீர்மானத்தை எட்ட வேண்டும் எனவும் அவர் கூறுகிறார்.

இந்த பேச்சுவார்த்தையின் ஊடாக எட்டப்பட்ட முடிவுகள் அல்ல எனக் கூறிய அவர், மார்க்கம் ரீதியிலான உரிமைகளை பாதிக்கக்கூடிய முடிவாகவே இது இருக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை தம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அரசாங்கத்திற்கு பிரச்னைகள் ஏற்படுகின்றபோது, அந்த பிரச்னைகளை திசை திருப்புவதற்கு முஸ்லிம்கள் தொடர்பிலான பல விடயங்களை முன் கொணர்வதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு அரபு நாடுகளிடமிருந்து ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளையே அரசாங்கம் எடுத்து வருவதாக முஜிபுர் ரகுமான் குறிப்பிடுகின்றார்.

கொவிட் தொற்றினால் உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இடமளித்தமையானதும், ஜெனிவாவில் அரபு நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்காக என அவர் கூறுகின்றார்.

**அரசாங்கத்தின் பதில்**

புர்கா தடைக்கான அமைச்சரவை பத்திரத்தை தான் அமைச்சரவையில் முன்வைத்துள்ளதாகவும், அந்த அமைச்சரவைப் பத்திரம் குறித்து இதுவரை கலந்துரையாடல் நடத்தப்படவில்லை எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிக்கின்றார். எதிர்வரும் நாட்களில் இந்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம் பெறும் எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவையின் நிகழ்ச்சி நிரலுக்குள் இந்த அமைச்சரவைப் பத்திரம் உள்வாங்கப்பட்டு, விரைவில் கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்திய நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையில், புர்கா தடை செய்யப்படவேண்டும் என்ற பரிந்துரை இடம்பெற்றுள்ளதாக சரத் வீரசேகர குறிப்பிடுகின்றார்.

இந்த பரிந்துரைகளை முன் வைத்தவர்களில் முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் எதிர்கட்சி அரசியல்வாதிகளும் உள்ளதாக அவர் கூறுகின்றார்.

புர்கா தடை செய்யப்பட வேண்டும் என முதலில் தான் பரிந்துரை செய்யவில்லையென கூறிய அவர், தனக்கு முன்னர் பலர் இதனை கூறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு மாத்திரமன்றி, ஜனாதிபதி ஆணைக் குழுவும் இதே பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகவும் அவர் நினைவூட்டினார்.

மேலும், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் இலங்கை விஜயத்திற்கு பின்னரே, ஜனாஸா அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டதாக கூறப்படும் கருத்தை, சரத் வீரசேகர நிராகரித்திருந்தார்.

ஜனாஸா அடக்கம் செய்யும் விவகாரமானது, அரசியல் தீர்மானம் கிடையாது எனவும், அது சுகாதார தரப்பினரின் தீர்மானம் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிடுகின்றார். ■

**ரஞ்சன் அருண் பிரசாத்**
பிபிசி தமிழுக்காக



# முஸ்லிம் அமைச்சர்களின் அழுத்தத்தினாலேயே அமைச்சர் பதவியிலிருந்து ரணில் என்னை நீக்கினார்

## விஜயதாச ராஜபக்ஷ நேர்காணல்



தமிழில் - சேகு

“நல்லாட்சிக் காலத்தில் முஸ்லிம் அமைச்சர்களின் அழுத்தத்தினாலேயே அமைச்சர் பதவி யிலிருந்து ரணில் என்னை நீக்கினார்” என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட எம்.பி. விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள் ளார். அந்த செவ்வியின் தமிழ் மொழிபெயர்ப்பு வடிவம் வருமாறு:

**கேள்வி:** ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

உண்மையில் நாம் கவலையடைய வேண்டும். ஏனெனில் திட்டமிடப்பட்ட இந்தத் தாக்குதலை யார் நடாத்தியது? இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தொடர்பில் கண்டுபிடிப்பதற்கு எமது நாட்டினுடைய பொலிசாருக்கு ஒரு வாரகாலம் போதுமானது. ஆனால் அதிக காலம் கடந்துள்ள போதிலும் கடந்த அரசாங்கம் அதனைச் செய்யவில்லை.

**கேள்வி:** காரணம் என்ன?

அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. பொலிஸ் உயர்மட்ட தரப்பினருடைய கவனயீனம். பொலிஸ் மா அதிபரிடம் முடிந்த அளவு தகவல்கள் இருந்தும் கூட அதனை தடுக்க நடவடிக்கை எடுக்காமைக்கு பொலிஸ் உயர் மட்டம் காரணமாகவுள்ளது. அதற்கு அரசாங்கம் பாரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. பொலிசாருக்கு தமது சேவையை புரிய இடமளிக்காது பாராளு மன்றத்தில் தெரிவுக்குழுவை அமைத்து பயங்கர வாதிகளுக்கு இடமளித்தனர்.

**கேள்வி:** அவ்வாறாயின் ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஊடாக எந்த பயனும் இல்லை என்றா கூறுகின்றீர்கள்?

அதனை நியமித்தது தவறு இல்லை. ஏனெனில் விரிவான விசாரணையை நடத்த இதனை நியமித்தனர். அதனை அமைத்தமைக்கான காரணங்கள் பல உள்ளன. இதன் ஆரம்பம் என்ன? ஏன் இந்த சம்பவம் இடம் பெற்றது? இதனுடன் தொடர்புடையோர் யார்? இதேபோன்றதொரு செயல் எதிர்காலத்தில் இடம் பெறுவதனை தடுப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் என்பவவை இதனுள் அடங்கும். அது சிறந்த விடயமாகும். இருப்பினும் பொலிசாருக்கு இது தேவைப்படாது. பொலிசாருக்கு இந்த அறிக்கை எதற்கு? இதனை யார் செய்தது. இதற்கான உதவியை வழங்கியோர் யார்? யார் பயங்கரவாதிகளை காப்பாற்றியது? என தேடி தண்டனையை பெற்றுக்கொடுப்பதே பொலிசாருக்கு தேவை யாகவுள்ளது. இது ஒரு வாரத்தில் செய்து முடிக்க கூடிய செயலாகும்.

**கேள்வி:** ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினை சேர்ந்த இலங்கையர் தொடர்பில் நீங்கள் தான் முதல் முதலில் பாராளுமன்றத்தில் கருத்து தெரியப்படுத்தியிருந்தீர்கள். உங்களுக்கு அந்த தகவல் எவ்வாறு கிடைக்கப்பெற்றது ?

அந்த தகவல் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது தொடர்பில் 8 மணிநேர வாக்குமூலத்தை ஜனாதிபதி ஆணைக்குழுவில் வழங்கியிருந்தேன்.

**கேள்வி:** அதனை பாராளுமன்றத்தில் நீங்கள் கூறியதன் குறிக்கோள் என்ன?

இரண்டு குறிக்கோள்கள் உள்ளன. அரச தலைவர் களிடம் கூறும் போது அதனை விளங்கிக்கொள்ள அவர்களுக்கு மூளை இல்லை என்பது முதல் விடயமாகும். மூளை இல்லாமை மற்றும் பயங்கர வாதிகளுக்கு எதிராக கருத்துரைக்க அச்சம் என்பதாலும் நாட்டில் இத்தகைய செயல் இடம் பெறுவதை தடுப்பதற்கும் மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் நினைத்தேன். அத்துடன் அனர்த்தமொன்று வருமுன் அது தொடர்பில் எச்சரிக்கை செய்யவேண்டியது அரசியல் வாதிகளின் பொறுப்பாகும். அதனை நோக்காகக்கொண்டே இந்த கருத்தினை முன்வைத்திருந்தேன்.

**கேள்வி:** இருப்பினும் அந்த அபாய எச்சரிக்கையை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை அல்லவா?

கவனத்தில் கொள்ளாமை மாத்திரமல்ல. அதன் காரணமாகவே அரசாங்கத்திலிருந்து என்னை வெளியில் போட்டனர். முஸ்லீம் அமைச்சர்கள் தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழுத்தம் கொடுத்தனர். அதுவும், நான் நீதி அமைச்சில் இருந்தால் தம்மால் அமைச்சு பதவிகளை வகிக்க முடியாது எனவும், தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகளை பெற்றுக்கொடுக்க முடியாது எனவும் அழுத்தம் தெரிவித்ததுடன், என்னை குறித்த பதவியிலிருந்து நீக்குமாறும் கூறியிருந்தனர். ரணிலுக்கு பெரும்பாண்மை வாக்குகள் முக்கியம். ஆகவே, அதனை கருத்தில் கொண்டு ரணில் என்னை நீதி அமைச்சு பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுத்தார்.

**கேள்வி:** எவ்வாறாயினும் நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்து கொண்டு ராஜபக்ஷக்களை பாதுகாத்துள்ளீர்கள் அல்லவா ?

ராஜபக்ஷக்களை பாதுகாக்கவில்லை. நான் கோட்டாபயவை கைது செய்வதற்கு ஏதுவான ஆதாரங்கள் இல்லை என்பதையே வெளிப்படுத்தி யிருந்தேன். ஏனெனில் கோட்டாபயவை எவன்கார் விவகாரத்திற்காக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழேயே கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர். அவ்வாறாயின் கோதாபய எந்த பயங்கரவாத செயலில் ஈடுபட்டிருந்தார்? அதேபோல் வெடிபொருள் சட்டத் தின் கீழ் கோட்டாபயவை கைது செய்ய எத்தனித் தனர். அதனை எவ்வாறு அப்படி எடுத்துக்கொள்வது? அந்த வெடிபொருட்கள் அனைத்தும் கடற்படையின் பொறுப்பில் இருந்தன. ஆகவே, நான் இந்த விடயங் களையே தெளிவுபடுத்தியிருந்தேன்.

அத்துடன், என்னை வெளியேற்றிய பின்னரும் கூட நல்லாட்சி அரசாங்கம் மேலும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் இருந்ததல்லவா. நான் பிழை எனின் 2018 திகதி என்னிடம் பணிந்து அமைச்சு பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினர். உயர்கல்வி அமைச்சையும், கலாச்சார அமைச்சையம் பொறுப்பேற்கு மாறு ரணில் என்னை அழைத்து கூறினார். ஜனாதி பதியும் என்னிடம் கூறினார். நான் பிழை செய்திருந் தால் எதற்காக வெட்கம் இன்றி என்னை மீண்டும் உள்ளே எடுத்தனர்? தொல்பொருட் பிரச்சினை உள்ளடங்கலாக பல பிரச்சினைகள் இருப்பதால் அந்த அமைச் சுக்களை பொறுப்பெற்குமாறு என்னிடம் பிராத்தனை செய்தனர். ஆகவே, நான் அந்த அமைச்சுக்களை பொறுப்பேற்க்கொண்டேன். அது மாத்திரமல்லாது அதற்குரிய கடமைகளையும் சரிவர நிறைவேற்றினேன்.

**கேள்வி:** அந்த காலத்தில் நீங்கள் ராஜபக்ஷக்கள் தொடர்பில் பேசினீர்களா?

இல்லை இல்லை. அந்த காலத்தில் ராஜபக்ஷக்கள் தொடர்பில் பேசவில்லை. மாறாக என்கார்ட்டுடன் தொடர்புடைய கோதாபய தொடர்பில் மாத்திரமே பேசினேன். அவ்வாறாயின் நாமலை கைது செய்வதற்கு எதிர்ப்பை வெளியிட்டேனா ? பசிலை கைது செய் வதற்கு எதிர்ப்பு தெரிவித்தேனா? இவர்களை கைது செய்யும் போது நான் எதிர்ப்பு தெரிவித்தேனா? அதற்கு எதிர்ப்பை வெளியிடவில்லை. நான் சாதார ணமாக குற்றவாளிகளுக்கு செல்லும் வழக்கறிஞர் அல்ல. இருப்பினும் நாட்டில் இடம் பெற்ற பாரிய குற்ற வழக்கிற்கு நான் சென்றிருந்தேன். அதன் காரண மாக எனக்கு குற்றவழக்கு மற்றும் சிவில் வழக்கு தொடர்பில் நன்கு தெரியும். அமைச்சரவைக்கும் என் னுடைய கருத்தில் நம்பிக்கை இருந்தது. இருப்பினும் கோட்டாபயவுடன் முரண்பாட்டில் இருந்த அமைச்சர்களே இதில் குழப்பத்தை தோற்றுவித்தனர்.

**கேள்வி:** நீங்கள் ஆதரவளித்த அரசாங்கத்தில் அமைச்சு பதவி கிடைக்கப்பெறாமை உங்களுக்கு மகிழ்ச்சியா?

உண்மையில் ஆம் என்றே கூறவேண்டும். என்னு டைய அரசியல் வாழ்க்கையில் இதனை மிகப்பெரிய சந்தோசமாக கருதுகின்றேன்.

**கேள்வி:** ஜனாதிபதி கட்சியின் தலைவர் இல்லாமை இந்த குழப்பநிலைக்கு காரணமாகுமா?

அதுவும் ஒருகாரணமாக அமையலாம். இருப் பினும், ஜனாதிபதிக்கு ஜனாதிபியான பின்னர் ஆளுமை இருந்தால் தடையின்றி எதனையும் ஆளமுடியும். அதற்கு அரசியல் ஆளுமை மற்றும் அனுபவம் வேண்டும்.

**கேள்வி:** ஜனாதிபதி எடுத்திருக்கும் எடுக்கும் தீர்மானங்கள் பிழையானவை எனக் கருதுகின்றீர்களா?

அது தொடர்பில் நான் கவலையடையப்போவ தில்லை. ரணில் விக்கிரமசிங்கவை வெளியேற்றுவதே எம்முடைய தேவைப்பாடாக இருந்தது. அந்த அரசாங்கம் மேலும் ஒரு வருடத்திற்க ஆட்சியில் இருந்தால் நாட்டை இழக்க நேரிடும் என எமக்கு தெரிந்தது. அதன் காரணமாகவே நான் அப்போது கோட்டாபயவுக்கு ஆதரவை தெரிவித்தேன்.

**கேள்வி:** இரண்டாம் முறை தேர்தலில் போட்டி யிடப்போவதில்லை என ஜனாதிபதி கூறுகின்றாரே?

அது தொடர்பில் கருத்து தெரிவிக்க என்னால் முடியாது. அது அவருடைய விருப்பதமாகும்.

**கேள்வி:** அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிறபாண்மை மக்களின் வாக்குகளை பெற்றக்கொள்ள கூடிய தலைவரை தேடவேண்டும் என்றவாறு ஜனாதிபதி கூறியிருப்பதாக அறியமுடிகின்றது. அந்த தலைவர் பசில் ராஜபக்ஷ என சிலர் கூறுகின்றனர். இது தொடர்பில் நீங்கள் அறிந்திருப்பீர்கள் அல்லவா?

ஆம் அது தொடர்பில் அறிந்திருக்கின்றேன். இருப்பினும் எனக்கு அது தொடர்பில் பேசுவதற்கு விருப்பம் இல்லை. இது அதற்கு பொருத்தமான நேரம் இல்லை என நினைக்கின்றேன். ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


**23**

கேள்விகள் பயிற்சி செய்வதற்கு

01E. தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செயதல் அல்லது தரப்பட்ட உருக்களை பொருத்தமான ஓர்முறையில் கூட்டங்களாக்குவதாகவோ அமையலாம்


**2015 (30)**

♦ ஒரு தாளிலிருந்து A,B என்னும் இரு முக்கோணிகள் வெட்டப்பட்டன. முக்கோணி A யின் மீது முக்கோணி B யை வைக்கும் போது கிடைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?




**2016 (28)**

♦ பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள எல்லாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தி ஆக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.





**2019 (17)**

17. கடதாசித் துண்டு A | △ | ○ | # | □ |

கடதாசித் துண்டு B | ⊕ | ✡ |

கடதாசித் துண்டு A இல் இருக்கும் குறியீடு ✡ மீது கடதாசித்துண்டு B இல் இருக்கும் குறியீடு இருக்குமாறு கடதாசித் துண்டு A மீது கடதாசித் துண்டு B ஐ வைக்கும் போது காணத்தக்க உரு யாது?





**2020 (13)**

13. கீழே தரப்பட்டுள்ள இரண்டு உருக்களும் ஊடுகாட்டும் தாள்கள் இரண்டில் வரையப்பட்டுள்ளன.




14. இரண்டு உருக்களினதும் C அடையாளத்தை ஒன்றன் மீது ஒன்ற அமையுமாறு ஒரு தாளின் மீது மற்றைய தாளை வைப்பதால் கிடைக்கும் உரு யாது?




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# அரசியல் சூழ்ச்சியால் ஆட்சி மாற்றம் இனி ஒருபோதும் ஏற்படுத்த முடியாது

## *என்கிறார் விமல் வீரவன்ஸ*

**கொழும்பு,மார்ச்.23**

**வில்பத்து காடழிப்புக்கு ஆதரவாகச் செயல்பட்டவர்கள் இன்று சூழலியலாளர்களாக, இயற்கையை பாதுகாப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். 2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த குறிப்பிடப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் தற்போது இரண்டாம் பாக மாக தோற்றம் பெற்றுள்ளது. இருப்பினும், அரசியல் சூழ்ச்சி யால் ஆட்சி மாற்றத்தை இனி ஒருபோதும் ஏற்படுத்த முடியாது என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**



அத்துருகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கம் குறுகிய காலத்தில் பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த திட்டமிடலின் ஊடாக அனைத்துச் சவால்களும் வெற்றிக் கொள்ளப்பட்டு நாடு தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது.

அரசியல் மற்றும் சமூக களத்தில் காடழிப்பு விவகாரம் பிரதான பேசு பொருளாகக் காணப்படுகிறது. வெளி நாடுகளில் அழிக்கப்பட்டுள்ள காடுகளின் படங்களைக் கொண்டு தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வில்பத்து காடு அரசி யல்வாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்படும் போது அதற்கு ஆதரவாகச் செயல்பட்டவர்கள் இன்று இயற்கையைப் பாதுகாக்கும் சூழலியலாளர்களாக அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர்.

வனப்பகுதிகளை அண்மித்த பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது அதனையும் சுற்றுச்சூழல் அழிப்பு செயல்பாடு எனப் போர்க்கொடி துக்குகிறார்கள். ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் செயல்திட்டத்தை பலவீனப் படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இயற்கை வளங்கள் ஏதும் அழிக்கப்படவில்லை. சுபீட்சமான இலக்கு கொள்கைத் திட்டத்தில் இயற்கையைப் பாதுகாக்க குறிப்பிடப்பட்ட விடயங்கள் பல தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளையும் எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது கவலைக்குரியது- என்றார். (எ)

# சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடுகளை எமது அரசாங்கம் முன்னெடுக்கவில்லை!

## *அமைச்சர் சி.பி. ரத்நாயக்க கூறுகிறார்*



கொழும்பு, மார்ச்.23

எதிர்க்கட்சியினர் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர். சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. காடழிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் முறையான விசாரணைக்குட்படுத்தப்படும் என வன மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

காடழிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரச அதிகாரத்துடன் வனப்பகுதிகள் அழிக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்தரப்பினர் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறான குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது.

வனப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அபிவிருத்திப் பணிகளின் போது இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயல்திட்டங்களை முன்னெடுக்க உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாக்க பல செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வனப்பகுதிகளை 30 வீதத்தால் அதிகரிக்க நாடு தழுவிய ரீதியில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனப்பபகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

காடழிப்பு குறித்து பல குற்றச்சாட்டுக்கள் இதுவரையில் முன்வைக்கப்பட்டுள்ளன. அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்து வனஜீவராசிகள் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்- என்றார். (எ)



# போலி நாணயத்தாள்களுடன் ஓட்டமாவடியில் ஒருவர் கைது

ஏறாவூர், மார்ச் 23

மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் காலணி விற்பனை நிலையம் ஒன்றில் போலி 5 ஆயிரம் ரூபா கொண்ட 20 நாணயத்தாள்களை வைத்திருந்த ஒருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்ததுடன் நாணயத்தாள்களும் விஷேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டு ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு குறித்த காலணி விற்பனை நிலையத்தை சுற்றிவளைத்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த நிலையத்தில் பணியாற்றும் ஒருவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா கொண்ட 2 இலட்சம் ரூபா 20 போலி நாணயத்தாள்களை மீட்டதுடன் அவரைக் கைது செய்து வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (எ)

# மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கு விரைவில் தீர்மானம் எடுக்க வேண்டும்

## ஜனாதிபதி, பிரதமரிடம் கபே வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 23

**மாகாண சபைத் தேர்தல் கடந்த மூன்று வருடங்களாக வெறும் பேசுபொருளாகவே உள்ளது. ஆகவே, இவ்விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் விரைவான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) வலியுறுத்தியுள்ளது.**



மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீனிடம் வினவிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளினதும் உத்தியோகபூர்வ கால எல்லை நிறைவுக்கு வந்து பல வருடங்களைக் கடந்துள்ளது.

அதாவது மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியற்றின் கால எல்லைகள் நிறைவுக்கு வந்துள்ளன.

இந்நிலையில் இந்தத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஒழுங்கான கருத்துக்களை அரசாங்கம் முன்வைக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மாகாண சபை முறைமை இலங்கைத் தேர்தல் முறையில் இருக்கின்றபோது, இந்தத் தேர்தலை பல வருட காலமாக நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கும் விடயமாகும்.

எனவே, இந்த மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் விரைவான தீர்மானத்தை எடுப்பது, ஜனாதிபதி மற்றும் பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் முக்கிய பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டார். (எ)

# 'காடழிப்பை ஆதாரத்துடன் நிரூபிப்போம்' ஆளும் தரப்புக்கு எதிர்க்கட்சி எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் எவ்வித வன அழிப்புக்களும் இடம்பெறவில்லை என ஆளும் தரப்பினர் கூறுகின்ற போதிலும், எந்தெந்த பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன என்பதை ஆதாரங்களுடன் எம்மால் நிரூபிக்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதன் மூலமும், எதிர்க்கட்சி மீது குற்றம்சுமத்துவதன் மூலமும் உண்மைகளை மறைக்க முடியாது என்பதை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

சுற்றாடல் பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு புதியதொரு மாற்றத்தை எதிர்பார்த்து தான் 69 இலட்சம் மக்கள் அரசியலில் ஈடுபடாத தலைவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஆனால், அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு முரணாகச் சுற்றாடல் அழிப்பு தொடர்பான விழிப்புணர்வு சித்திரங்களைக் கூட காட்சிப்படுத்த முடியாத நிலைமை இளம் சந்ததியினருக்கு ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்தும் ஊடகங்கள் நேரடியாக அச்சுறுத்தலுக்குள்ளாகின்றன. பொலிஸாரும் நேரடியாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் முதன் முறையாக 'எமது அரசாங்கம்' என்று கருத்துக்களை தெரிவித்துள்ளார். உயர் பதவிகளிலுள்ள அதிகாரிகள் இவ்வாறு செயல்படும் போது கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும்?

20 ஆவது அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இவ்வாறு தான் ஏகாதிபத்திய ஆட்சி முன்னெடுக்கப்படும் என்பதை நாம் முன்னரே கூறியிருந்தோம். இவ்வாறான ஆட்சியில் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் நாமே கூறினோம். ஒருபுறம் இனவாதமும், அடிப்படைவாதமும் தூண்டிவிடப்பட்டது. மறுபுறம் பொய் கூறி மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் பல விடயங்களை நினைவுபடுத்துகின்றன. சில ஊடகங்கள் அரசாங்கத்துக்கு சார்பான கருத்துக்களை வெளியிடும் போது அவை போற்றப்பட்டன. எனினும் தற்போது மரங்கள் வெட்டப்படுவதைக் காண்பிக்கும் போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அவரது உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தை ஊடுறுவிய மாணவனை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அன்பளிப்புக்களை வழங்கினார். எனினும் தற்போது சுற்றாடல் சீரழிவு தொடர்பில் உண்மைகளைக் கூறிய மாணவி சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார். பிரதான ஊடகங்களை விட சமூக ஊடகங்களும் உண்மைகளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாகவே தற்போது ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது- என்றார்.



# கடற்படையின் பிரதானியாக ருவான் பெரேரா நியமனம்!

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரியர் அட்மிரல் ருவான் பெரேராவை இலங்கைக் கடற்படையின் பிரதானியாக நியமித்துள்ளார்.

நேற்று முன்தினம் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, கடற்படைத் தலைமையகத்தில் வைத்து ரியர் அட்மிரல் ருவான் பெரேராவுக்கு நியமனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக வழங்கினார். (எ)

# எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசு கைச்சாத்திடாது

## உயர் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் (எம்.சி.சி.) ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடாது என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை தடுக்க வேண்டும் எனக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதேவேளை, சோபா ஒப்பந்தம் குறித்தும் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் அறிவித்தார்.

மேலும், கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் அதுதொடர்ந்தும் செயல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து குறித்த மனுக்கள் மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் ஜூன் 12ஆம் திகதி எடுத்துக்கொள்வதாக 03 பேர் அடங்கிய நீதியரசர்கள் அமர்வு அறிவித்துள்ளது. (எ)

# வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய 12 பேருக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 354 கொரோனா நோயாளர்களில் 12 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்கள் என கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், கம்பஹா மாவட்டத்திலேயே நேற்றுமுன்தினம் அதிக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் கம்பஹாவில் 197 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 58 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேரும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 70 பேரும் கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து இலங்கையில் இதுவரையில் 90 ஆயிரத்து 200 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)



## ஆஸியில் பெரும் வெள்ளம்: 18, 000 மக்கள் இடப்பெயர்வு!

சிட்னி, மார்ச் 23

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் தொடர் மழையால் ஏற்பட்ட கடும் மழையால் 18 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும், அங்கு தொடர்ந்து மழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

சிட்னி நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அத்துடன் ஆறுகள் கரைபுரண்டு ஓடுகின்றன. குளங்களும் நிரம்பி வழிகின்றன என்று அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'50 ஆண்டுகளில் ஒரு நிகழ்வு' என்று அழைக்கப்படும் இந்த வெள்ளப் பேரிடரில் இருந்து மக்களை மீட்பதற்கு இராணுவம் பயன்படுத்தப்படுகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை நியூ சவுத் வேல்ஸில் அதிகரித்த மழை, வலுவான காற்று, அசாதாரணமான அதிக அலைகளுடனான வானிலை நிலவும் என்று அவுஸ்திரேலிய ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. சுமார் ஒரு கோடி மக்கள் இந்த வானிலை எச்சரிக்கையை எதிர்கொண்டுள்ளனர் என்று அது கூறியுள்ளது.

மத்திய, வடக்கு கடற்கரையிலிருந்து 15 ஆயிரம் பேரும், சிட்னி நகரத்தில் மூவாயிரம்பேரும் இடம் பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களுக்கு நிதியுதவி அளிக்க பிரதமர் ஸ்கொட் மொரிசன் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, படகுகள், ஹெலிகொப்டர்களின் உதவியுடன் மீட்பு பணிகள் தொடர்கின்றன. 1961 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்திலும் பார்க்க இந்த வெள்ளப் பேரிடரால் சேதங்கள் அதிகம் என்று நியூ சவுத் வேல்ஸ் மாகாண அரசு தெரிவித்துள்ளது. அத்துடன், இந்தப் பேரிடரால் நேற்று வரை எந்த இறப்பும் பதிவாகவில்லை. இது ஓர் அற்புத அதிசயம் என்றும் அந்த அரசு தெரிவித்துள்ளது. (ஐ)



## தாய்லாந்து போராட்டத்தில் வன்முறை: 33 பேர் படுகாயம்: 30 பேர் கைதாகினர்!

பாங்கொக், மார்ச் 23

தாய்லாந்தில் அரசமைப்பு மாற்றம், மன்னரின் அதிகாரங்களை குறைத்தல், தற்போதைய அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து மாணவர் போராட்டம் ஒரு வருடமாக நடக்கிறது.

இந்தப் போராட்டத்தில் கைதான முக்கிய தலைவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கானோர் கூடி போராட்டம் நடத்தினர். தலைநகர் பாங்கொக்கில் உள்ள அரண்மனை முன்பு இந்தப் போராட்டம் நடந்தது.

இதன்போது, போராட்டக்காரர்கள் அரண்மனைக்குள் நுழையாதவாறு பொலிஸார் தடுப்புகளை ஏற்படுத்தினர். இதைத் தாண்டி அவர்கள் செல்ல முற்பட்டபோது வன்முறை வெடித்தது. இதன்போது, பொலிஸார் மீது கண்ணாடி போத்தல்கள், கற்களை வீசி போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர்.

வன்முறையை தடுக்க பொலிஸார் தண்ணீரை வீசியடித்தனர். அத்துடன், புகைக் குண்டுகளையும் வீசி, தடியடியும் நடத்தினர். ஆனாலும் நிலைமை கட்டுக்குள் வராததால் இறப்பர் குண்டுகளால் போராட்டக்காரர்களை சுட்டனர்.

இந்த வன்முறையில் 33 பேர் காயமடைந்தனர். இதில் 13 பொலிஸாரும், 2 பத்திரிகையாளர்களும் அடங்குவர். அத்துடன், 30இற்கும் மேற்பட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## பிரிட்டனுக்கு தடுப்பூசி ஏற்றுமதி தடை:

# ஐரோப்பிய தலைவர்களுடன் பிரதமர் பொறிஸ் பேச்சு!

லண்டன், மார்ச் 23

கொரோனா தடுப்பூசிகளை பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்வ தற்கு தடை விதிப்பது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களிடம் பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் பிரிட்டன் ஊடகங்கள் வெளியிட்ட செய்தி களில்,

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து பிரிட்டனுக்கு கொரோனா தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருகிறது. இதற்காக வியாழனன்று இணைய வழி உரையாடல் நடைபெற்றது. அவ்வாறு ஏற்றுமதிக்கு தடைவிதிக்கும் திட்டத்திற்கு அனுமதியளிக்கக்கூடாது என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கெல் உள்ளிட்டோரிடம், பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தொலைபேசியில் பேச்சு நடத்தவுள்ளார்.

முன்னதாக ஐரோப்பிய ஒன்றியத்தில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் செயல்பாடு மிகவும் மெதுவாக இருப்பதாக பரவலாக குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக ஒன்றியம் முழுமைக்கும் சேர்த்து 12 வீதமானோருக்கே இதுவரை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. பிரிட்டனில் 40 வீதமானோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதேநேரத்தில் பிரிட்டனில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் கொரோனா தடுப்பூசிகளின் வீதமும் குறைவாகவே உள்ளது.

எனவே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உற்பத்தியாகும் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகளை பிரிட்டனுக்கு



ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தின் தலைவரான உர்சுலா வான் டேர் லேயென் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் ஐரோப்பிய ஒன்றியம் இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று பிரிட்டன் தலைவர்கள் வேண்டுகோள் வைத்துள்ளனர். (ஐ)

## நான்கு நாடுகளின் பெண்களை திருமணம் செய்ய சவுதி தடை!

ரியாத், மார்ச் 23

பாகிஸ்தான், பங்களாதேஷ், சாட் மற்றும் மியன்மார் ஆகிய 4 நாடுகளை சேர்ந்த 5 இலட்சம் பெண்கள் சவுதி அரேபியாவில் வசிக்கின்றனர் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், இந்த 4 நாடுகளைச் சேர்ந்த பெண்களை திருமணம் செய்ய சவுதி அரேபிய ஆண்களுக்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

இந்த 4 நாடுகளின் பெண்களை திருமணம் செய்ய விரும்பும் சவுதி அரேபிய ஆண்கள் இனி கடும் கட்டுப்பாடுகளை சந்திக்க நேரிடும் என்று அந்த நாட்டின் மக்கா நகர பொலிஸ் இயக்குநர் மேஜர் ஜெனரல் அசாப் அல்-குரேஷி கூறினார் என செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் உள்ளிட்ட 4 நாடுகளின் பெண்களை திருமணம் செய்ய விரும்பும் ஆண்கள் முறைப்படி அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதைப் பரிசீலித்து அனுமதி வழங்கினால் மட்டுமே திருமணம் செய்து கொள்ள முடியும். விவாகரத்து பெற்ற ஆண்கள் அடுத்த 6 மாதங்கள் வரை வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியாது. 25 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் அதை உறுதிப்படுத்தும் வகையில் மாவட்ட மேயரால் வழங்கப்பட்ட ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும். அடையாள ஆவணம், குடும்பத்தினர் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## தென்சீன கடலில் சீனா மீறல்! பிலிப்பைன்ஸ் அரசு கவலை!!

மணிலா, மார்ச் 23

தென் சீன கடலில், சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகள் உரிமை கொண்டாடும் பகுதியில், 200இற்கும் மேற்பட்ட சீன மீன்பிடி படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிலிப்பைன்ஸ் கவலை தெரிவித்துள்ளது.

தென் கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸின், பலாவன் மாகாணத்தின் மேற்கு பகுதியில் இருந்து, 324 கி.மீ., தொலைவில், தென் சீன கடல் பகுதியை, சீனா - பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடுகின்றன. கடல் வளங்கள் நிறைந்த இந்த பகுதியில் மீன் பிடிப்பது தொடர்பாக, இரு நாடுகளுக்கும் இடையே பிரச்னை நிலவி வருகிறது.

வளங்கள் நிறைந்த இந்தப் பகுதி, தங்களுக்கு மட்டுமே உரியது என, பிலிப்பைன்ஸ் உரிமை கொண்டாடி வருகிறது. இந்தப் குதியில், கடந்த, 7ஆம் திகதி, 200இற்கும் மேற்பட்ட சீன மீன்பிடி படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று பிலிப்பைன்ஸ் கவலை தெரிவித்துள்ளது. (ஐ)



## சொந்த சமூகவலைத்தளம் மூலம் மீண்டும் களத்திற்கு வரும் ட்ரம்ப்!

வாஷிங்டன், மார்ச் 23

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய சமூகவலைத்தளம் ஒன்றை தொடங்கவுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தேர்தல் சமயத்தில் தனது சொந்த நாட்டின் முன்னணி இணைய ஜாம்பவான் நிறுவனங்களால் புறக்கணித்து ஒதுக்கப்பட்டார். உலகெங்கும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தும் அவரது சர்ச்சைக்குரிய பதிவுகளில் இருந்து தடுக்கப்பட்டார். அரசியல் எதிர்காலத்தின் முக்கியமான ஒரு கட்டத்தில் ருவிட்டர், முகநூல், யூ ரியூப் என்று அவர் ஆடிய களங்கள் அனைத்தும் திடீரென அவரிடமிருந்து பறிக்கப்பட்டதால் மிகவும் ஆடிப்போயிருந்தார்.

முகநூலைத் தொடர்ந்து 8.8 கோடி பயனாளர்களைக் கொண்டிருந்த ட்ரம்பின் கணக்கை ருவிட்டர் தளமும் நிரந்தரமாக முடக்கிவிட்டது. சமூக வலைத் தளங்கள் ஊடாக நாட்டில் வன்முறையைத் தூண்டினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டே அவரது கணக்குகள் முடக்கப்பட்டன.

ட்ரம்ப் அடுத்த மூன்று மாதங்களில் உலகில் பல இலட்சக்கணக்கான பயனாளர்களைக் கவர இருக்கின்ற ஒரு புதிய சமூகவலைத் தளத்தில் உலா வர இருக்கிறார் என்ற தகவலை அவரது பேச்சாளர் ஜசோன் மில்லர் வெளியிட்டிருக்கிறார்.

புதிய தளம் "மிகப் பெரியது" உலகில் பெரும் "சூட்டைக் கிளப்பும்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் மிகப் பிரபல வர்த்தகரும் கோடீஸ்வரருமான டொனால்ட் ட்ரம்ப், தொடங்கவுள்ள புதிய சமூக ஊடகம் குறித்து மேலதிக விவரங்கள் வெளியாகவில்லை.

டொனால்ட் ட்ரம்ப் 2024 இல் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் மீண்டும் களம் இறங்குவார் என்ற கேள்விகளை இன்னமும் அவர் மறுக்கவில்லை. அதனை இலக்காகக் கொண்டே புதிய சமூக வலைத் தளத்தை அவர் ஸ்தாபிக்கின்றார் எனக் கூறப்படுகிறது. (ஐ)



# மியாமி ரென்னிஸ்: விலகினார் செரீனா!

மியாமி, மார்ச் 23

சத்திர சிகிச்சை செய்ததன் காரணத்தால் மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரிலிருந்து அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் விலகியுள்ளார்.

23 முறை கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்ற செரீனா கடந்த பெப்ரவரியில் மெல்பர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் அரையிறுதி ஆட்டத்தில் ஜப்பான் வீராங்கனை நயோமி ஒஸாகாவிடம் தோல்வியடைந்தார்.

இந்நலையில், "நான் போட்டியிலிருந்து பின்வாங்குவதில் ஏமாற்றமடைகிறேன்" என்று மியாமி ஓப்பனை எட்டு முறை வென்ற 39 வயதான செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

மியாமி எனக்கு ஒரு சிறப்பு போட்டியாகும். ஏனெனில், இது எனது வீடு, இந்த ஆண்டு உண்மையான ரசிகர்களை என்னால் பார்க்க முடியாதது வருத்தமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் நேற்று ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஜாம்பவான்களின் கிரிக்கெட்:

# இந்தியா சம்பியன்

ராஜ்பூர், மார்ச் 23

ஜாம்பவான்களின் இருபது - 20 தொடரில் இலங்கை அணியை 14 ஓட்டங்களால் வெற்றி கொண்டு சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது இந்திய அணி.

வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி உலக முன்னாள் ஜாம்பவான்கள் பங்கேற்கும் இருபது - 20 தொடர் இந்தியாவின் ராஜ்பூரில் நடந்தது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான இந்திய அணியும், திலகரட்ண டில்ஷான் தலைமையிலான இலங்கை அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடியது இந்திய அணி.

சேவாக், டெண்டுல்கர் தொடக்கம் கொடுத்தனர். ஆனால், இவர்களால் நிலைத்து ஆட முடியவில்லை. சேவாக் 10, அடுத்து வந்த பத்ரிநாத் 7, டெண்டுல்கர் 30 ஓட்டங்களுடன் அவர்கள் ஆட்டமிழந்தனர்.

நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த யுவராஜ் சிங்கும் யூசுப் பதானும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால், அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை எகிறியது. 41 பந்துகளை சந்தித்த யுவராஜ் சிங் 4 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசி 60 ஓட்டங்களைக் குவித்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 181 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

இலங்கையின் பந்து வீச்சில், ரங்கன ஹேரத், சனத் ஜெயசூரியா, பர்வேஸ் மஹரூப், வீரரத்ன ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு டில்ஷான், ஜெயசூரியா தொடக்கம் கொடுத்தனர். சிறப்பான ஆரம்பத்தை இருவரும் ஏற்படுத்தினர். டில்ஷான் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சாமர சில்வா 2 ஓட்டங்களுடன் வெளியேற, 5பௌண்ட் ரிகள், ஒரு சிக்ஸருடன் 43 ஓட்டங்களை எடுத்த ஜெய சூரிய யூசுப் பதானின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த சிந்திக ஜெயசிங்க 40, வீரரத்ன 38 ஓட்டங்களை குவித்தனர். ஏனைய வீரர்கள் ஜொலிக்காத நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 167 ஓட்டங்களையே இலங்கை அணி பெற்று தோல்வியைத் தழுவியது.

யூசுப் பதான், இர்பான் பதான் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் மன்பிரீத் கோனி, முனால்ப் பட் டேல் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)

மேற்கிந்தியாவுடனான டெஸ்ட்:

# 169 ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கை!

அண்டிகுவா, மார்ச் 23

இலங்கை அணியை 169 ஓட்டங்களுக்கு சுருட்டியது மேற்கிந்தியத் தீவுகள்.

இலங்கை அணி மேற்கிந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் சென்றுள்ளது. அங்கு இரு அணிகளும் ஒருநாள், இருபது - 20 தொடர்களில் விளையாடின. இவற்றில் இலங்கை தோல்வியடைந்த நிலையில், இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று முன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) ஆரம்பமானது.

அண்டிகுவாவில் ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால் முதலில் ஆடிய இலங்கை அணிக்கு தலைவர் டிமுத் கருணாரட்ண, லஹிரு திரிமன்னே இணை தொடக்கம் கொடுத்தது. 12 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கருணாரட்ண கோர்ன்வோலின் பந்தில் கேம்பெல்லிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

மறுமுனையில் வந்த ஒஷத பெர்னாண்டோ 4, டினேஸ் சந்திமால் 4, தனஞ்சய 13, பதும் நிஷாங்க 9 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஆறாவது விக்கெட்டுக்காக திரிமன்னேயுடன் இணைந்த நிரோஷன் டிக்வெல்ல சிறப்பான துடுப்பாட்டத்தை வழங்கினார். ஆனால், இந்த இணையும் அதிக நேரம் நீடிக்கவில்லை. நிரோஷன் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



அவரைத் தொடர்ந்து, 4 பௌண்ட்ரிகளுடன் 70 ஓட்டங்களை பெற்றிருந்த திரிமன்னே ஹோல்டரின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

69.4 ஓவர்களே தாக்குப்பிடித்த இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில், ஜசன் ஹோல்டர் 5, கெமர் ரோச் 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரைக் பிராத்வெயிட், ஜோன் கேம்பெல் இணை தொடக்கம் கொடுத்தது.

முதல்நாள் ஆட்டம் நிறைவில், 13 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களைப் பெற்றது அந்த அணி. (ஐ)

# சாதனை போட்டியில் 2 கோல் மெஸ்ஸி கொண்டாட்டம்!

பார்ஸிலோனா, மார்ச் 23

லயனல் மெஸ்ஸி நேற்று முன்தினம் இரவு, 768 ஆவது போட்டியில் களமிறங்கினார். இதன் மூலம், பார்ஸிலோனா அணிக்காக அதிக போட்டிகளில் களமிறங்கியவர் என்ற பெருமையை சேவியிடம் இருந்து தன்வசமாக்கினார்.

ஸ்பெயினின் பலம் பொருந்திய அணிகளில் ஒன்றான ரியல் சோசியடட் அணிக்கு எதிரான இந்தப் போட்டியில் 1 -6 என்ற கணக்கில் பார்ஸிலோனா வெற்றி பெற்றது. தனது சாதனைப் போட்டியில் களமிறங்கிய மெஸ்ஸி, இரு கோல்களை அடித்து அசத்தினார்.

இதன் மூலம் நடக்கும் லா லிகா தொடரில் மெஸ்ஸி 23 கோல்களை இதுவரை அடித்துள்ளார். அத்துடன் பார்ஸிலோனாவுக்காக 663 கோல்களை இதுவரை பெற்றுள்ளார். லாலிகா தொடரைப் பொறுத்த வரை அவர் 467 கோல்கள் அடித்து முதல் வீரராக உள்ளார். அவரின் நெருங்கிய போட்டியாளராக கிறிஸ்ரியானோ ரொனால்டோ 311 கோல்களே அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இனி தொடக்க வீரராகவே கோலி களம் காண்பாராம்!

புதுடில்லி, மார்ச் 23

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் பல இடங்களில் துடுப்பெடுத்தாடியுள்ளேன். தற்போதைய நிலையில் நடுவரிசையில் வலுவாக இருக்கிறேன் என்று உணர்கிறேன். எனவே, வரும் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் ரோஹித் சர்மாவுடன் இணைந்து தொடக்க வீரராக இறங்கவே விரும்புகிறேன் என்று கோலி கூறியுள்ளார்.

சிறப்பாக துடுப்பெடுத்தாட இருவர் ஒன்றாகக் களம் காணும் போது எதிரணிக்கு நெருக்கடி ஏற்படுத்த இயலும். ஒருவர் நிறுத்தி நிதானமாக ஆடுகையில், மற்றவர் அதிரடி காட்ட இயலும். அணியில் இருக்கும் இதர வீரர்களும் இதை ஆதரிக்கின்றனர். இங்கிலாந்துக்கு எதிரான கடைசி இருபது - 20 ஆட்டத்தில், ஆட்டத்தை தொடங்கியபோது நானும், ரோஹித்தும் பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் புரிதலுடன் விளையாடினோம்.

தொடக்கத்தில் ரோஹித் அதிரடி காட்ட, அடுத்து சூர்யகுமார் யாதவ் அதை அப்படியே தொடர்ந்தார்.

பின்னர் வந்த ஹார்திக் பாண்ட்யா அதை நிறைவு செய்தார். இது அணிக்கு வலுவான நிலையை அளித்தது. கடைசி ஆட்டத்தை அணிக்கான முழுமையான ஒரு ஆட்டமாக உணர்ந்தோம். எதிரணியை முற்றிலுமாக அனைத்து நிலைகளிலும் தோற்கடித்தோம்.

ரிஷப் பந்த், ஷ்ரேயஸ் ஐயருக்கு துடுப்பெடுத்தாட செய்ய வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் 225 ஓட்டங்களை சேர்த்தோம். அவுஸ்திரேலிய தொடருக்குப் பிறகு ஷர்துல் தாகூரின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. அவரின் பந்துவீச்சு சிறப்பாக உள்ளது என்றும் கோலி கூறினார்.

# சஹ்ரானின் அடிப்படைவாதக் கொள்கைகளுக்கு ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனரா?

*சரத் வீரசேகர மீண்டும் சர்ச்சைக்குரிய கருத்து*

கொழும்பு, மார்ச் 23

தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் அடிப்படைவாதக் கொள்கைகளுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சில உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மாளிகாகந்த விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஏப்ரல் - 21 குண்டுதாரிகளின் தந்தையான இப்ராஹிம், மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகச் செயல்பட்டுள்ளார். இவ்விடயம் குறித்த விசாரணைகளில் வாக்குமூலம் வழங்க நேரிடும் என்பதில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அச்சம் கொண்டுள்ளார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இப்ராஹிம் என்பவர் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகச் செயல்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் கொள்கைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சில உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சிலைகளை வழிபடுபவர்கள் கோத்திரர்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க அண்மையில் குறிப்பிட்டுள்ளார். சிலைகளை வழிபடுபவர்களுக்கு எதிராகச் செயல்பட்ட சஹ்ரான் போன்ற அடிப்படைவாதிகளின் கொள்கைக்கு ஈர்க்கப்பட்டவர்கள் சிலை வழிபாடுகளுக்கு எதிராகக் கருத்துரைப்பவர்களாகக் கருதப்படுவார்கள் எனத் தெரிவித்தார். (எ)

*பசறை விபத்தின் எதிரொலி*

# வாகனங்களின் ரயர்களை கண்காணிக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 23

பசறையில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பயங்கர விபத்தையடுத்து வாகனங்களில் ரயர்களின் தரத்தை ஆய்வு செய்ய பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேய்ந்துபோன ரயர்களுடன் வாகனம் ஓட்டும் நபர்களுக்கு 3,500 ரூபாவும், தரமற்ற வாகனங்களை செலுத்துபவர்களுக்கு 25,000 ரூபா வரையும் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வாகனங்களை அடையாளம் காண நேற்று முதல் மூன்று நாள்களுக்கு நாடு முழுவதும் விஷேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, வீதி விபத்துக்களால் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்துக்குள் நாடு முழுவதும் எட்டு உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# தேர்தலை பிற்போடும் தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது

*இரு வாரத்துக்குள் தீர்வு என்கிறார் இராஜாங்க அமைச்சர் ரொஷான்*



**கொழும்பு, மார்ச் 23**

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட சிக்கலுக்கு இரண்டு வாரங்களுக்குள் உரிய தீர்வு பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை எக்காரணங்களுக்காகவும் பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. எந்தத் தேர்தல் முறைமையின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என உறுதியான தீர்வு கிடைத்தவுடன் தேர்தல் நடத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

'பல்வேறு காரணங்களால் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை பிற்போட இடமளிக்க முடியாது. பழைய தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதா? அல்லது புதிய கலப்பு தேர்தல் முறைமையின் பிரகாரம் தேர்தலை நடத்துவதா? என்பதில் சட்ட சிக்கல் காணப்படுகின்றது. இப்பிரச்னைக்கு இரண்டு வார காலத்துக்குள் உரிய தீர்வு காண எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்களும், மதத் தலைவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், எதிர்ப்புக்கான காரணத்தை தெளிவுபடுத்தவில்லை. இனப்பிரச்னைக்குத் தீர்வாக அறிமுகப்படுத்திய மாகாண சபை முறைமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை அனைத்து மாகாணங்களிலும் மாகாண சபை முறைமை செயல்படுத்தப்பட்டுள்ளன.

மாகாண சபை முறைமை குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆராயப்படும். குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற காரணத்தால் அரசமைப்பில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க முடியாது. மாகாண சபைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு தீர்வு காணப்படும்.

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் பிற்போடுகின்றது என்று விமர்சிக்கும் உரிமை எதிர்க்கட்சியினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் கிடையாது. நல்லாட்சி அரசாங்கம் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அடைந்த தோல்வி காரணமாக மாகாண சபைத் தேர்தலை திட்டமிட்டு பிற்போட்டது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்படவில்லை. கட்சி ரீதியிலான முரண்பாட்டை அரசியல் வாதிகள் மாகாண சபை முறைமை ஊடாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் பலவீனமடைந்தன. இவ்விரு மாகாண சபைகளின் பலவீனத்தால் முழு மாகாண சபை முறைமையையும் பலவீனம் எனக் கருத முடியாது. ஆகவே, மாகாண சபைத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும்- என்றார். (எ)

# ஊடக உரிமைகளை பாதுகாக்க ஐ.ம.ச. முன்னின்று செயல்படும்!



*மயந்த திஸாநாயக்க உறுதி*

கொழும்பு, மார்ச் 23

ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். அதேவேளை, ஊடகங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னின்று செயல்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஊடகங்கள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் மூலம் ஜனாதிபதியால் யாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்துக்கு முன்னர் அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்த ஊடகவியலாளர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

எவ்வாறிருப்பினும் ஊடகங்கள் தொடர்பில் இதுபோன்று முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஊடகங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னின்று செயல்படும்.

இது இவ்வாறிருக்க நாட்டில் நெல் மற்றும் எரிவாயு பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. எனினும் அரசாங்கம் இதனை மறைக்கின்றது. எனவே, மக்களிடம் உண்மைகளை மறைக்காமல் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பாரிய சுற்றாடல் சீரழிவு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் பல பௌத்த மதத் தலைவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுடன் ஒப்பிடும் போது தற்போதைய அரசாங்கத்திலேயே பாரியளவில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது சுற்றாடலை பாதிப்படையச் செய்து ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கு அனுமதிப்பத்திர மளிக்கப்பட்டுள்ளது. முத்துராஜவல உள்ளிட்ட முக்கிய வனப் பகுதிகள் தற்போதைய அரசாங்கம் ஆட்சி பொறுப்பேற்றதன் பின்னரே பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளன. நாம் கூறுவது பொய்யெனில் அதனை எவருக்கேனும் உறுதிப்படுத்துமாறும் சவால் விடுக்கின்றோம்- என்றார். (எ)

# மரண தண்டனை கைதி துமிந்தவுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்

*ஜனாதிபதியிடம் சனத் நிஷாந்த கோரிக்கை*

கொழும்பு, மார்ச் 23

மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும். அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டவர்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் பாரிய சந்தேகம் காணப்படுகின்றது. தீர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் அரசியல்வாதிகள் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து கலந்துரையாடியமை குரல் பதிவுகள் ஊடாக வெளியாகின.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். மரண தண்டனை தீர்ப்பு அரசியல் காரணிகளையும், தனிப்பட்ட பழிவாங்கலையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் காணப்படுகிறது. ஆகவே, மரண தண்டனைத் தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம்

நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்கலுக்கு அனைத்து அதிகாரத்தையும் பயன்படுத்தியது. அரச அதிகாரிகள் பலர் அரசியல் பழிவாங்கலுக் குட்படுத்தப்பட்டனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமை ஆதாரபூர்வமாக வெளியாகின.

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கப்படும். அத்துடன் அரச அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்- என்றார். (எ)

## உயிர்த்தியாகம்...

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன இலங்கையின் நிலைப்பாட்டினை ஜெனிவாவில் தெரியப்படுத்தியுள்ளார். இந்த தீர்மானம் குறித்து, சொல்வதாயின், தீர்மானம் எந்தவொரு நீதி, நியாயத்திற்கான நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதல்ல. இந்த தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ள 40 நாடுகள் உலகின் ஒரு பகுதியாகவே பிரதிநிதித்து வம் பெறுகின்றன. ஆசிய நாடுகளில் எந்த நாடும் அதில் கையெழுத்திட வில்லை. ஆப்பிரிக்க நாடுகளில் ஒருநாடு மட்டுமே கையெழுத்திட்டுள்ளது. இந்த யோசனை என்பது ஒட்டுமொத்த உலக நாடுகளின் நிலைப்பாடல்ல என்பது இதில் புலப்படுகின்றது. இது விமர்சனத்திற்குரியதாகும்.

உலகை எடுத்துக்கொண்டால் இலங்கை மாத்திரமா பிரச்சினைக்குரியது? மிகவும் பாரதூரமான பிரச்சினை இலங்கையிலா இடம்பெறுகிறது? இலங்கையினால் உலகத்திற்கு உள்ள அச்சுறுத்தல் என்ன? அப்படியாயின் ஏன் இலங்கை மீது கவனம் அதிகரிக்கின்றது? இதற்கு காரணம்தான் வெளிநாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளின் தேவைக்காகவாகும்.

'புலம்பெயர் சமூகத்தின் வசமுள்ள அதிகபட்ச பலமும், ஒருங்கிணைப்பு மற்றும் பணபலம் ஆகியவற்றை பயன்படுத்தியே இலங்கைக்கு எதிராக சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எமது நாட்டின் மக்கள், அரசாங்கத்திற்கு எந்த வகையிலும் இது பாதிக்காது. அத்துடன் தற்போதைய அரசாங்கத்திற்கெதிராக உள்ள எதிர்ப்பாகும். இதற்கு முன் இருந்த அரசாங்கத்திற்கு பாதுகாப்பு செய்ததுடன், முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்கள். அனைத்து நாடுகளையும் சமமான முறையில் கவனிக்கப்படவேண்டும் என்கிற கொள்கையை ஐ.நா. மனித உரிமைப் பேரவை மீறுகிறது.

வாக்கெடுப்பில் எந்த பிரதிபலன் வந்தாலும் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்து விளக்கம் அளிக்கின்றேன். வாக்கெடுப்பில் என்ன நடந்தாலும் 70 ஆண்டுகளுக்கும் மேல் ஐ.நாவில் இருக்கும் நாடாக நாங்கள் எமது பொறுப்பினை சரிவர செய்வோம். ஐ.நாவுக்கு பெறுமதி சேர்க்கின்ற பணிகளை எமது நாடு நிறைவேற்றியுள்ளது. சிறந்த நட்புறவை ஐ.நாவுடன் தொடர்ந்தும் பேணுவோம். இருப்பினும் ஐ.நா உறுப்பு நாடுகள் மற்றும் ஜெனிவா ஆணையாளர் அலுவலகம் என்பவற்றுக்கு இடையே உள்ள விடயத்தை தெரிவித்தால், அந்த அலுவலகம் மிகவும் பக்கச்சார்பாகவே இலங்கை விவகாரத்தில் செயற்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தை குறைத்தே மதிப்பிட்டுள்ளதால் எமது கவலையை இதற்கு தெரிவிக்கின்றோம். அந்த அலுவலகம் மற்றும் விடயதானங்களை மீறியே ஆணையாளர் அலுவலகம் செயற்பட்டிருக்கின்றது. நாட்டின் உள்விவகாரத்தில் தலையீடு செய்ய ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலகத்திற்கு முடியாது. இருப்பினும் அதனையும் அலுவலகம் செய்தது.

இலங்கை மக்களே இதுகுறித்து தீர்மானம் எடுக்க வேண்டும். இலங்கை அரசின் செயற்பாடுகளை வெளிநாட்டமைப்புகளுக்கு கண்காணிப்பு செய்ய இடமளிக்க முடியாது. இலங்கையின் அரசியலமைப்பு மீறும் செயலாகவே இது அமையும். அதனை நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம். எதிர்கால நடவடிக்கைகள் அனைத்தும் உள்நாட்டுப் பொறிமுறைக்கமையவே முன்னெடுப்போம். நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு, உடலாகம ஆணைக்குழு என்பன இருந்ததோடு நவாஸ் ஆணைக்குழுவும் இப்போது உள்ளது. அந்த ஆணைக் குழுக்களுக்கு கௌரவம் அளிக்க வேண்டும்.

இதேவேளை அரசாங்கம் மற்றும் நாடு என்கிற வகையில் ஜெனீவா புதிய யோசனையில் உள்ள ஒரு பயங்கரமாக விடயம் உள்ளது. இலங்கைக்கு எதிராக சாட்சிகளை சேகரித்து, ஆய்வு செய்யவும், அதிகாரிகள் நியமனம் மற்றும் நிதி ஒதுக்கீட்டையும் ஆணையாளரின் அலுவலகம் செய்கின்றது. இந்த செயற்பாட்டை ஐ.நா மனித உரிமையாளர் ஆணையாளர் அலுவலகத்தால் செய்ய இடமளிக்கமுடியாது. இதனை கண்டிக்கின்றோம். தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் பிரதிபலன் என்னவாக அமைந்தாலும் எமது படையினரை நாங்கள் உயிர்த்தியாகம் செய்தேனும் பாதுகாப்போம்.

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் படையினரை பாதுகாப்பதற்கான சட்டங்களை அமைத்துள்ளன. அதேபோன்ற சட்டங்களை நாங்களும் அரசியலமைப்பிலும், நாடாளுமன்றத்தின் ஊடாக உருவாக்குவோம்." எனவும் அவர் தெரிவித்தார்.

## வடக்கில்...

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த 83 வயது பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 32 வயது பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே தொற்றாளராக அடையாளம் காணப் பட்ட ஒருவருடன் நேரடித் தொடர்புடையவர்.

இதேவேளை, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரும் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் நேரடித் தொடர்புடையவர்.

அத்தோடு, மன்னார் நகரைச் சேர்ந்த ஆண் ஒருவர் மன்னார் பொது வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## யாழில்...

உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக்காலை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த 63 வயது வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் கடந்த வாரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர் மூச்சுத் திணறலையடுத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அவர் உயிரிழந்தார்.

இந்த வயோதிபப் பெண்ணுக்கு மருத்துவ சேவை வழங்கிய அதிதீவிர சிகிச்சை பிரிவு தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, வயோதிபப் பெண்ணின் சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின் தகனம் செய்யப்படவுள்ளது.

## கொரோனா...

இதேவேளை, நேற்று உயிரிழந்தவர்கள் குருநாகல், காலி, கம்பஹா மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்றும் அனைவரும் 50 வயதைக் கடந்தவர்கள் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று உயிரிழந்தவர் இந்த எண்ணிக்கைக்குள் அடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுற்றாடலுக்கு...

கொள்ள முடியும் என்று இவ்வாறான பிரசாரங் களை பரப்புபவர்களிடம் தெரிவிக்க விரும்பு கின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

குப்பை மலைகள் நிறைந்த இடமாக காணப்பட்ட கொழும்பை குறுகிய காலத்தில் அழகிய நகரமாக நாமே மாற்றினோம் என்பதை தற்போது என்னை அதிகமாக விமர்சிக்கும் கொழும்பு மக்கள் நன்று அறிவர் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுபீட்சத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைய நேற்றுத் திங்கள் கிழமை நதிகளை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி தலைமையில் மாணிக்க கங்கைக்கு அருகில் றுஹூணு கதிர்காம புனித தலத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்தவை வருமாறு:

சர்வதேச நீர் தினமான இன்று (நேற்று) நதிகளை பாதுகாப்போம் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்று சுற்றாடல் பாதுகாப்பு பெருமளவானோர் மத்தியில் பிரதான பேசு பொருளாகியுள்ளது. சுற்றாடலில் நீர் முக்கியத்துவமுடைய காரணியாகவுள்ளது. இலங்கையில் காணப்படுகின்ற 103 நதிகள் பெறுமதிவாய்ந்தவையாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் வெள்வேறு நிலைப்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. இதனூடாக போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக ஊடகங்கள் ஊடாக பாரியவில் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நான் செயல்பட்ட போது சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். இதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பிரதான நபராக நான் மாத்திரமே காணப்படுவதைப் போலவே சமூக ஊடகங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நான் மாத்திரம் மரங்களை வெட்டுவதைப் போலவும் ஏனைய அனைவரும் சுற்றாடலைப் பாதுகாப்பவர்களைப் போலவும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

ஒவ்வொருவரும் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவார்களாயின் சுற்றாடலைப் பாதுகாப்பது இலகுவானதாகும் என்று சமூக வலைத்தளங்களில் பிரசாரங்களை முன்னெடுப்பவர்களிடம் தெரிவிக்கின்றேன். மக்களால் இழைக்கப்படும் தவறுகளாலேயே பணத்தை செலவிட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்கும் போது தற்போது எம்மை அதிகளவில் விமர்சிக்கும் கொழும்பு வாழ் மக்களுக்கு கொழும்பில் எவ்வாறு குப்பை மலைகள் குவிந்திருந்தன என்பது நன்றாகத் தெரியும். அவற்றை அப்புறப்படுத்த முடியாது என்று சிலர் கூறினர். எனினும் நாம் குறுகிய காலத்தில் அவற்றை அப்புறப்படுத்தி அழகான சூழலை உருவாக்கினோம்.- என்றார். (அ-எ)

## இலங்கையின்...

பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் தற் போது இடம்பெற்று வரும் நிலையில் பிரித்தானியா, கனடா, ஜேர்மன், வட மசிடோனியா, மொன்டனீக்ரோ, மலாவி ஆகிய நாடுகள் இணைந்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்வைத்துள்ளன. இந்தத் பிரேரணையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல காரணிகள் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்றுத் திங்கள் கிழமை இலங்கை தொடர்பில் விவாதத்தோடு முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம் பெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

வாக்கெடுப்பின் பின்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இலங்கையின் நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், குறித்த பிரேரணையில் பல விடயங்கள் அரசியல் தேவைக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன என இலங்கை எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

இலங்கையின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் குற்றம்சுமத்துதல், அவை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துதல் என்பன சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## ஜெனிவா...

ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பில் உள்ள ஐ.நாவின் கிளை அலுவலகத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை முற்பகலில் இந்த அமைதி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர் ஒருவர், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேலின் புகைப்படத்தை கிழித்தெறிந்தார். அதனை கீழே எறிந்து காலிலும் மிதித்தார்.

மற்றும் ஆணையாளரின் புகைப்படத்தை தீயிட்டு கொளுத்த அவர் முயற்சித்தபோது பொலிஸார் வந்து தடுத்ததால் அங்கு பரபரப்பு நிலை ஏற்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்று வரும் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் போர்க் குற்றச்சாட்டு மற்றும் பொறுப்புகூறல் தொடர்பில் பிரித்தானியாவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மீது இன்று வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

## இஸ்லாமிய...

தொடர்பு கொண்டு பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இஸ்லாமிய நாடுகள் ஒன்றியத்தின் செயலா ளர் நாயகம் டாக்டர் யுசெப் ஏ. அலோத்தி மேனுடன் ஞாயிற்றுக்கிழமை தொடர்பு கொண்ட ஜனாதிபதி, இரு தரப்பு உறவுகள் குறித்தும், இலங்கையில் முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பாகவும் உரையாடியுள்ளார்.

கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம் களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற் கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கியிருப்பதற்கு இஸ்லாமிய நாடுகள் ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் நன்றி தெரிவித்தார்.

இதேவேளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பஹ்ரெயின் மன்னர் சல்மான் பின் ஹமீட்டுடன் தொலைபேசி மூலமாகப் பேசியுள்ளார். இருதரப்பு உறவுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது தாம் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

## நவநீதம்பிள்ளை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எது எப்படியிருந்தபோதிலும், இறுதிக் கட்ட யுத்தத்தில் மிக ஈனத்தனமான மனித உரிமை மீறல்கள் அரச தரப்பினரால் மட்டு மல்ல, யுத்தத்தின் அகோரத்திலிருந்து தப்ப முயன்ற மக்களை தடுக்க முயன்ற போராளி களாலும் மீறப்பட்டுள்ளதே உண்மையாகும். 'யுத்தம் என்று ஒன்று ஏற்பட்டு விட்டால் உண்மையே அதற்கு முதலில் இரையாகின்றது' என்றே குறிப்பிடப்படுவதுண்டு.

எனவே, இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால யுத்தத்தில் ஆயுதம் ஏந்திய

அனைத்து தரப்பினராலும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட நிலையில், இத்தடவை கொண்டுவரப்படும் ஜெனிவா பிரேரணை இலங்கையில் 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற வகையில், இலங்கையின் மோசமான இறந்த காலத்துக்கு ஒரு நிரந்தரமான முற்றுப்புள்ளியை வைக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.

ஈழநாடு
Eelanadu

## பொ - பொ பேரணி வழக்கு:

# சமர்ப்பணங்களை சமர்ப்பிக்க இரு தரப்புக்கும் 4 வார அவகாசம்!

வடமராட்சி, மார்ச் 23

பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரையான பேரணி தொடர் பான வழக்கில் எழுத்துமூல சமர்ப் பணங்களை வழங்க 4 வார கால அவகாசம் வழங்கி யுள்ளது பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றம்.

பேரணி தொடர்பில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதி கள் சார்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கில், வழக்காளி களான பொலிஸார் சார் பில் பிரதம மன்றாடியார் அதிபதி மாதினி விக்னேஸ் வரன், ருவான் குணசேகர, மாதவ தென்னக்கோன் ஆகி யோரும், பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத் தரணி எம். ஏ. சுமந்திரன், வி. திருக்குமரன், எஸ். சயந் தன், வி.மணிவண்ணன் உள்ளிட்ட 11 சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

பருத்தித்துறை, வல்வெட்டித் துறை பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை மேற்கொண்டு விசார ணைக்கு எடுக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு பொலி ஸார் சார்பில் பிரதி மன்றாடியார் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்தார்.

மேலும், தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சந்தேக நபர்களாக எவரும் பெயர் குறிப்பிடப்படவில்லை. வழக்கை தாக்கல் செய்தவர்களுக்கான தகைமையையும் கொண்டிருக்கவில்லை. பொலிஸார் இது தொடர்பாக "பி" அறிக்கை மட்டுமே தாக்கல் செய்துள்ளனர். எனவே, விசாரணையை தொடர முடியாது என பிரதிவாதிகள் சார்பில் கோர முடியாது என்று வாதிட்டார்.

சந்தேகநபர்களை பெயர் குறிப் பிடப்படாமல் இருந் தாலும் நீதிமன்ற அவமதிப்பை புரிந்துள்ள னர் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை யால், அவர்கள் வழக்கீட்டு தகை மையை கொண்டிருக்கின்றனர் என்று பிரதிவாதி கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

ஒரு புலன் விசாரணைகளை ஆரம்பிக்க அடிப்படை சட்டங்கள் உள்ளன. அவை பூர்த்தி செய்யப்படாத நிலையில், நீதிமன்ற நட வடிக்கைளை ஆரம்பிக்க முடி யாது என்று கடந்த தவணை போலவே இம்முறையும் பிரதிவாதிகள் சார் பில் சமர்ப்பணம் செய்யப்பட்டது.

அரச தரப்பின் பூர்வாங்க ஆட்சேபனையைத் தொடர்ந்து, எழுத்து மூல ஆட்சேபனையை வழங்க அரச தரப்பு கேட்டது. இதற்கிணங்க, இரு தரப்பும் எழுத்து மூல சமர்ப்பணங்களை வழங்க 4 வார கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

அத்துடன், இரு தரப்பு பூர் வாங்க ஆட்சேபனைகள் தொடர்பாக மே மாதம் 3ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பிக்கும் என மன்று அறிவித்துள்ளது.(ஐ-2)

# காரணமின்றி நடமாட்டம்: 4 பெண்களுக்கு அபராதம்!

கொழும்பு, மார்ச் 23

எந்தக் காரணமும் இன்றி இரவில் தெருக்களில் நட மாடிய 4 பெண்களுக்கு நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை பகுதியில் நடமாடிய நான்கு பெண்களே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு தலா 50 ரூபா அபரா தம் விதித்து தீர்ப்பளித்தது கோட்டை நீதிமன்று (ஐ)

# கோட்டா ஆட்சியில் வட, கிழக்கு விகாரை உடைப்புக்கள் நிறுத்தம்

## பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம்



**கொழும்பு, மார்ச் 23**

**ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் மக்கள் எதனை கோரினார்கள் என்பதை பலர் மறக்கடிக்கச் செய்ய முயற் சிக்கின்றனரென சிறிலங்கா பொதுஜன பெரமுனையின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கா பொதுஜன பெரமுனை தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருவருடமும் 04 மாதங்களாகவே இந்நாட்டு ஜனாதிபதியாக இருந்து வருகின்றார் என்பது பலருக்கு மறந்துபோயுள்ளது. அதுமட்டுமல்ல எமது அரசாங்கம் மிகக்குறுகிய பாராளுமன்றம் தெரிவாகி சிறிது காலமே பணியாற்றி வருகின்றது என்பதையும் பலர் மறந்துவிட்டனர். கொரோனா தொற்றுக்கு முகங்கொடுத்தே இந்த அரசாங்கம் எதிர்நீச்சல் செய்து வருகின்றது.

"போரின் பின்னர் சமாதான சூழலில் நாட்டைப் பொறுப்பேற்ற நல்லாட்சி அரசாங்கம், மீண்டும் குண்டு வெடிக்கின்ற, இனமுறுகலான நாடாக மாற்றியமைத் துள்ளது. இந்த நாட்டின் சிங்கள பௌத்த மக்களுக்கு போயா தினங்களில் சில் பெறுவதற்கும் வழிபாட்டில் ஈடுபடுவதற்கும் அப்போதைய அரசாங்கம் கட்டுப்பாடு விதித்திருந்தது. கத்தோலிக்க மக்களுக்கு ஞாயிறு தினங் களில் தேவாலயம் செல்ல முடியாத மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பள்ளிவாசல் செல்ல முடியாத நிலைமையே அப்போதிருந்தது.

"எமக்கு இந்த இனவாத, அடிப்படைவாதத்திலிருந்து நாட்டை மீட்டு ஆலயம் செல்லவும், அங்கு சென்று வேண்டுமென்றால் ஆர்ப்பாட்டம் செய்யவும் அமைதி யான நாட்டை ஜனாதிபதி கோட்டாபயவிடம் கோரி யதுடன் அதனை நிறைவேற்றிக் கொடுத்தார். இந்த நாட்டில் நகரங்களில் வரிச்சுமை காரணமாக வர்த்தகர் கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். குறுகிய நாளில் இன்று ஜனாதிபதி நிவாரணம் அளித்துள்ளார். வடக்கு, கிழக்கில் விகாரைகள் உடைக்கப்பட்டு, பிக்கு கள் கைது செய்யப்பட்டு காணிக்கை பெட்டிகள் சீல் வைக்கப்ப்டடு பௌத்த மக்களுக்கெதிராக சூழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது. எமது அரசாங்கம் இதனையும் மாற்றியமைத்துள்ளது. ஜெனிவாவில் முன்னர் அரசாங்கமே தீர்மானம் கொண்டு வந்து, அனுசரணை வழங்கி, படையினருக் கெதிராக வழக்கு தொடர்வதற்கும் வழியமைக்கப்பட்டிருந்தது. எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த யோசனையை நீக்கியுள்ளார்.

"எமது நாட்டின் பாரிய காணிகள் சோபா ஒப்பந்தத் தின் ஊடாக, வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்பனை செய்யக்கூடிய முயற்சிகளையும் ஜனாதிபதி இரத்து செய்திருக்கின்றார். மேலும் பகல் நேரங்களில் துப்பாக் கிப் பிரயோகம், கொள்ளை என பாதாள உலகக் குழு வினரின் செயற்பாடுகள் இடம்பெற்றபோது அதனையும் முடக்கியுள்ளார் ஜனாதிபதி.

"2.2 வீத பொருளாதார வளர்ச்சியாக அந்தகதியிலி ருந்த வளர்ச்சி வீதத்தை மாற்றியமைத்து, பங்குச் சந் தையை பலப்படுத்தி, வட்டி வீதத்தையும் கட்டுப்பாட் டிற்குள் கொண்டுவர ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் முடிந்தது. அனைத்து இன மக்களுக் கும் ஒரே நாடு என்பதை மக்கள் கோரினார்கள். வடக்கில் ஆவா குழு என கொடூரமான குழுக்கள் இருந் தன. தெற்கில் வீதி பொலிஸாருக்கும்கூட சுதந்திரமாக செயற்பட முடியாத தன்மை இருந்தது. அந்த நிலை மையை மாற்றி, அச்சமற்ற சூழல் உருவாக்கப்பட்டுள் ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

# கனகராயன் ஆற்றில் மணல் அகழ்வு: வருங்காலத்தில் பெரும்பாதிப்பை தரும்

## வடக்கு மாகாண ஆளுநர் எச்சரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சியின் மிகப்பெரும் வளங்களில் ஒன்றான கனகராயன் ஆற்றில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு எதிர்காலத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ்.

ஆறுகளை பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சி திட்டம் நேற்று ஆரம்பமானது. இதில், வடக்கு மாகாணத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடை பெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிப் பேசிய அவர் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு:

"மனித நாகரிகங்கள் நதிக்கரைகளில் இருந்தே தோற்றம் பெற்றன. அக்கால பகுதியில் நதி சுத்தமான நீரை கொண்டு வந்தது. குறிப்பாக இந்தியாவில் உள்ள கங்கை நதியில் நீராடினால் மனித உடலில் காணப்படுகின்ற நோய்கள் வியாதி கள் அற்றுப்போகும் என்ற சொல்லப் பட்டது. ஆனால், இன்று மனித உயிர்களுக்குக் கேடு விளைவிக்கும் ஒரு நதியாக மாறியிருக்கின்றது.

இவ்வாறு இயற்கை மீது மனி தன் செலுத்துகின்ற ஆதிக்கமானது, மனித வாழ்வுக்கு ஒவ்வாத சூழலை உருவாக்கியுள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இன்று குடிதண் ணீருக்கான தட்டுப்பாடு இருக்கின் றது. வடக்கு மாகாணத்திலும் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் வளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்று படுக்கையின் கீழ் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இது எதிர் காலத்தில் இந்த நீர்த் தேக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தும். அரச அதிகாரிகள், அரச திணைக்களங் கள் கூட்டங்கள், மாநாடுகளை நடத்தியும், பொலிஸ், இராணுவ பாதுகாப்பை பயன்படுத்தியும் இத னைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைவிட, இவ்வாறான செயல் பாடுகளில் ஈடுபடுகின்ற ஒவ்வொ ருவரும் தங்களது எதிர்கால சந் ததியை கருத்தில் கொண்டு செயல் படுவார்கள் எனின் இவ்வாறான இயற்கை மீதான காடழிப்பு, மணல் அகழ்வு என்பன இடம்பெறாது - என்றார். (ஐ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி.கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான



மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : டேக் இட் ஈஸி
6.00 மணி : ட்றெய்லர் டைம்-திரைப்படங்களின் முன்னோட்டக்காணொளிகள்
6.30 மணி : மூவி டோக்கீஸ் -ஆங்கில திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைசுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்